# பின்னிணைப்புக்கள்

## பின்னிணைப்பு I

1973இல் இலங்கை நாடாளுமன்றத்தினுலும், இலங்கை தேசிய அரசப் பேரவையினுலும் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்ட ஆக்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய பகுதிகள்.

## பொருளடக்கம்

### சட்டவாக்கங்கள்


| | | |
|---|---|---|
| *1.* | நிதி (திருத்தச்) சட்டம் | (i) |
| 2. | நெல் உற்பத்தியாளர் சேமிப்புச் சட்டம் | (v) |
| 3. | இரத்தினக்கல் (மன்னிப்பு) சட்டம் | (ix) |
| 4. | கமத்தொழிற் காப்புறுதிச் சட்டம் | (xii) |
| 5. | கடன் சபை (திருத்தச்) சட்டம் | (xxxi) |
| 6. | செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் | (xxxii) |
| 7. | கடன் இணக்க (திருத்தச்) சட்டம் | (Liv) |
| 8. | வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் (திருத்தச்) சட்டம் | (Lv) |
| 9. | மூலதனவரி (திருத்தச்) சட்டம் | (Lvi) |
| 10. | அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்டம் | (Lxxxiv) |
| 11 | நிதிச் சட்டம் | (Lxxxxii) |

# மத்திய வங்கியினதும் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1973ஆம் ஆண்டின் முக்கிய சட்டவாக்கங்கள்

## 1973ஆம் ஆண்டின் 7ம் இலக்க நிதி திருத்த(ச்) சட்டம்

### 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்

*1973ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி சான்றிடப் பட்டது.*

1. இச்சட்டமானது 1973ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதி (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இறுதியாக 1971ஆம் ஆண்டின் 55ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்து இதன்மேல் ''முதன்மைச்சட்டம்'' எனக் குறிப்பிடப்படும்) 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 159ஆம் பிரிவு, பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகிறது:

(1) ''மரணசாதன நிறைவேற்றுநர்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துதல் மூலமும்:—

' ''வெளிநாட்டு நாணயம்'' என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையது; ' ;

(2) ''அமைச்சர்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துதல் மூலமும் :—

' ''வதிவில்லாத'' என்பது, 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 54ஆம் பிரிவின் பொருளுக்குட்பட இலங்கையில் வதியாத எனப்பொருளாகும்; ' ;

(3) ''முன்னைய பங்காளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துதல் மூலமும் :—

'"உல்லாசப் பிரயாணி" என்பது, இலங்கைக் குடிமகன் அல்லாதவராய், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரால் அவருக்கு வழங்கப்பட்டதான புறக்குறிப்பொன்றைக் கொண்டிருக்கும் செல்லுபடியான கடவுச்சீட்டு ஒன்றை வைத்திருக்கும் எவரேனும் ஆள் எனப் பொருளாகும்;' அத்துடன்

(4) "மொத்த விற்பனை வரவு" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"மொத்த விற்பனை வரவு" என்பது, ஏதேனும் தொழில் தொடர்பில் அத்தொழில் தொடர்பாகச் செய்துகொண்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து அல்லது அத்தொழிலைக் கொண்டு நடாத்தும்போது புரியப்பட்ட சேவைகளுக்காகப் பெற்றுக்கொண்ட அல்லது பெற்றுக் கொள்ளற்பாலதான மொத்தத் தொகை எனப் பொருளாகும் என்பதுடன் —

(அ) நிதி கொடுப்பவரொருவர், பணம் கடன் கொடுப்பவரொருவர் அல்லது அடகு பிடிப்பவரொருவர் விடயத்தில், அவரால் கடனாகக் கொடுக்கப்பட்ட பணங்களையும், அத்தகைய கடன்களின்மீது அவர் பெற்றுக்கொண்ட அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய வட்டியையும், அத்தகைய கடன்கள் தொடர்பில் கட்டணங்களாக அல்லது வேறு இறுப்புகளாக அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைகளையும்:

(ஆ) ஏலவிற்பனையாளரொருவர் விடயத்திலும், (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாகத் தரகரொருவர் அல்லது தரகு முகவரொருவர் விடயத்திலும் —

(i) அவரால் விற்கப்பட்ட காணிகள் தொடர்பில் அல்லது அவற்றின் விற்பனைக்கு அவர் காரணராயிருந்த காணிகள் தொடர்பில்,

அத்தகைய விற்பனை தொடர்பாக அவரால் செய்யப்பட்ட எவையேனும் வியாபார நடவடிக்கைகளுக்காக அல்லது புரிந்த சேவைகளுக்காக அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளற்குரிய தரகுகள் அல்லது கட்டணங்களையும்;

(ii) அவரால் விற்கப்பட்ட எவையேனும் பொருள்கள் தொடர்பில் அல்லது அவற்றின் விற்பனைக்கு அவர் காரணராயிருந்த பொருள்கள் தொடர்பில், அத்தகைய பொருள்களின் கொள்வனவுக்காரரால் கொடுக்கப்பட்ட அல்லது கொடுத்தற்குரிய முழுத்தொகையையும் ;

(இ) (i) வதிவில்லாத ஆள் ஒருவர் சார்பில் அவ்வதிவில்லாத ஆளின் எவையேனும் பொருள்களை விற்கின்ற அல்லது அவற்றின் விற்பனைக்குக் காரணராக இருக்கின்ற, அல்லது

(ii) இலங்கையில் உற்பத்தியாகும் எவையேனும் பொருள்களின் ஏற்றுமதியாளர் ஒருவர் சார்பில் செயற்படுகின்ற, அல்லது

(iii) இலங்கையில் தொழில் ஒன்றைக் கொண்டு நடத்தும் எவரேனும் வேறு ஆளின் சார்பில் அத்தகைய தொழில் 120ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவிலுள்ள "தொழில்" என்னும் சொல்லின் பொருளுள் அடங்கும் தொழிலாகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, எப்பொருள்களின் விற்பனையின் மொத்த விற்று வரவுகள் அவ்வேறு ஆளின் தொழிலின் மொத்த விற்பனையில் சேர்க்கப்பட்டுள்ளனவோ அப்பொருள்களை இலங்கையில் விற்பதில் காரணராக

இருக்கின்ற, (பங்குத் தரகரொருவர் அல்லது விற்ப னைப் பொருட் தரகரொருவர் அல்லாத (எவரேனும் தரகர் அல்லது தரகுமுகவரின் விடயத்தில் அவ்வாறு விற்பதில், செயலாற்றுவதில் அல்லது அவ்வாறு விற் பதற்குக் காரணராதலில் அவரால் செய்யப்பட்ட எவையேனும் வியாபார நடவடிக்கைகள் அல்லது புரியப்பட்ட சேவைகள் தொடர்பில் அத்தகைய தரகர் அல்லது தரகுமுகவரால் பெற்றுக்கொள்ளப் பட்ட அல்லது பெற்றுக்கொள்ளற்குரிய தரகுகள் அல்லது கட்டணங்களையும் ; அத்துடன் பங்குத் தரகரொருவரின் அல்லது விற்பனைப்பொருட்டரக ரொருவரின் விடயத்தில், அவரால் செய்யப்பட்ட எவையேனும் வியாபார நடவடிக்கைகள் அல்லது புரியப்பட்ட சேவைகள் தொடர்பில் அத்தகைய தரகர் அல்லது தரகுமுகவரால் பெற்றுக்கொள்ளப் பட்ட அல்லது பெற்றுக்கொள்ளற்குரிய தரகுகள் அல்லது கட்டணங்களையும்; அத்துடன்

(ஈ) ஏதேனும் கல்வித்தாபனத்தை அல்லது பள்ளிக்கூடத்தைக் கொண்டுநடாத் தும் ஆள் ஒருவர் விடயத்தில், கல்வித் தாபனத்தின் அல்லது பள்ளிக்கூடத் தின் பணங்களை முதலீடு செய்வதால் வரும் இலாபங்கள் தவிர்வாக, அத் தகைய கல்வித் தாபனத்தை அல்லது பள்ளிக்கூடத்தைக்கொண்டு நடாத்து வதில் அவரால் பெற்றுக்கொள்ளப் பட்ட அல்லது பெற்றுக்கொள்ளற் படற்பாலதான முழுத்தொகையை யும்,

உள்ளடக்கும்; ஆனால், இச்சட்டத்தின் இப் பாகத்தில் வெளிப்படையாக வேறுவகையிற் கூறப்பட்டிருந்தாலன்றி, மூலதனச்சொத்துக் களை விற்பதனால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளற்குரிய ஏதேனும் தொகையை உள்ளடக்காது; '.

3. முதன்மைச் சட்டத்தின் 159ஆம் பிரிவில், இச்சட்டத் தினால் செய்யப்பட்ட திருத்தங்கள், 1971ஆம் ஆண்டு, திசெம்பர் மாதம் 28ஆம் தேதியன்று பயனுடையனவாக வந்துள்ளனவெனக் கருதப்படுதல் வேண்டும்.

# 1973 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நெல் உற்பத்தியாளர் சேமிப்புச் சட்டம்

நெல் சந்தைப்படுத்தற் சபைக்கு அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனைக்காரர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்ட நெல்லுக்காக உற்பத்தியாளர் ஒருவருக்குக் கொடுக்கப்படவேண்டிய விலையிலிருந்து குறித்தவொரு விதிக்கப்பட்ட தொகையைக் கழிப்பதற்காகவும், அத்தகைய உற்பததியாளரின் பெயரிலுள்ள தனியானவொரு சேமிப்புக் கணக்கில் அவ்வாறு கழிக்கப்பட்ட தொகையை வரவு வைப்பதற்காகவும் அத்தகைய சபைக்கு அல்லது கொள்வனைகாரருக்கு அதிகாரமளிப்பதற்கும், அத்தகைய கணக்குகள் எந்நிபந்தனைகளின் கீழ் வைத்திருக்கப்படலாமென்பதை விதிப்பதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

**1.** இச்சட்டம் 1973 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நெல் உற்பத்தியாளர் சேமிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதோடு கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினல் நியமிக்கப்படக்கூடிய, அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**2.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெல் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், நெல் சந்தைப்படுத்தற் சபைக்கு அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கொள்வனைகாரருக்கு விற்பனை செய்யப்பட்ட நெல்லுக்காக உற்பத்தியாளர் ஒருவருக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகையிலிருந்து, அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட நெல் தொடர்பில் அமைச்சரினல் விதிக்கப்படவேண்டியவாறான தொகையொன்றைக் கழிப்பது, அத்தகைய சபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனைகாரருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) உற்பத்தியாளர் ஒருவருக்குக் கொடுபடவேண்டிய பணங்களிலிருந்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவ்வாறு கழிக்கப்பட்ட தொகை, அத்தகைய உற்பத்தியாளரின் பெயரிலுள்ள சேமிப்புக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்கென, அத்தகைய உற்பத்தியாளர் வதியும் பிரதேசத்திலுள்ள விதிக்கப்பட்ட ஒரு வங்கியில் அத்தகைய சபையினுல் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனைகாரரினுல் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாமுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வைப்பிலிடப் பட்டுள்ளனவும் உற்பத்தியாளர் ஒவ்வொருவரினதும் சேமிப்புக் கணக்கின் வரவிலுள்ளனவுமான அத்தகைய பணத்தொகைகளின்மீது விதிக்கப்பட்ட வீதத்திலான வட்டி கொடுக்கப்படுதல் வேண்டும்.

3. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கங்களுக்காக, விதிக்கப்பட்ட ஏதேனும் வங்கியானது ஏதேனும் கூட்டுத்தாபனத்தை அல்லது கிராம வங்கியை அல்லது வேறேதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தை அதன் முகவராக நியமிக்கலாம்.

4.. உற்பத்தியாளரொருவரின் தனியான சேமிப்புக் கணக்கில் வரவிலிருக்கும் தொகையானது —

(அ) அத்தகைய உற்பத்தியாளர், ஆணுகவிருப்பின், அறுபது வயதினை அடைந்த பின்னர், அல்லது அத்தகைய உற்பத்தியாளர், பெண்ணுகவிருப்பின், ஐம்பத்தைந்து வயதினை அடைந்ததன் பின்னர் ;

ஆயின், எவ்வாருயினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று, அத்தகைய உற்பத்தியாளர் ஆணுகவிருந்து அறுபது வயதினை அடைந்திருக்குமிடத்து அல்லது பெண்ணுகவிருந்து ஐம்பத்தைந்து வயதை அடைந்திருக்குமிடத்து, 2ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்படும் கழிவுகள், அத்தகைய உற்பத்தியாளர் தொடர்பாக முதலாவது வைப்புச் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்ததன் பின்னர் மட்டுமே, கொடுபடற்பாலனவாதல் வேண்டும்; அல்லது

(ஆ) செய்தொழில் மாற்றம் காரணமாக இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட, அத்தகைய உற்பத்தியாளர், உற்பத்தியாளர் ஒருவராக இல்லாதொழிந்ததன் பின்னர்; அல்லது

(இ) நிரந்தரமாகவும் முழுமையாகவும் வேலை செய்யவியலாமை காரணமாக அத்தகைய உற்பத்தியாளர் அத்தன்மையில் தொழிலுக்கமர்த்தப்படாதொழிந்து, அக்காரணத்திற்காக அவ்வேலையை இனிமேல் செய்வதற்குத் தகுதியற்றவரெனப் பதியப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவரினுல் சான்றளிக்கப்பட்டதன் பின்னர்; அல்லது

(ஈ) அவ்வுற்பத்தியாளர் இலங்கைக்குத் திரும்பிவரும் கருத்து இல்லாமல் இலங்கையைவிட்டு வெளியேறுவதாக எழுத்தில் வெளிப்படுத்தினுல், அவ்வாறு அவர் இலங்கையை விட்டு வெளியேறும் தேதியின் முன்னர்,

இயலக் கூடியளவு விரைவாக அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில், ''பதியப்பட்ட மருத்துவத் தொழிலர்'' என்பது மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் கீழான பதியப்பட்ட ஒரு மருத்துவத் தொழிலர் என்று பொருளாகும்.

**5.** உற்பத்தியாளரொருவரின் தனியான சேமிப்புக் கணக்கில் வரவிலிருக்கும் தொகைக்கு அவர் உரித்துடையராக வருமுன்னர் இறக்கின்றவிடத்து அல்லது அதற்குரித்துடையவராகி, ஆனால் அத்தொகையினைப் பெறுமுன்னர் இறக்கின்றவிடத்து அல்லது அத்தகைய உற்பத்தியாளர் இறக்கும் சந்தர்ப்பத்தில், அத்தகைய தொகை கொடுபடவேண்டியவரென அத்தகைய உற்பத்தியாளரினால் நியமத்தர் எவரும் நியமிக்கப்படாதவிடத்து அல்லது ஒரு நியமத்தர் நியமிக்கப்பட்டிருந்து அந்நியமத்தர் இறந்திருக்கின்றவிடத்து அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்து, அவர்களுள் எவரேனும் இறந்திருக்கின்றவிடத்து, அப்போது அத்தகைய தொகையானது, அத்தொகையைப் பெறச் சட்டப்படி உரித்துடைய ஆளுக்குக் கொடுக்கப்படுதல்வேண்டும்.

**6.** உற்பத்தியாளரது சேமிப்புக் கணக்கின் வரவிலிருக்கும் தொகையை மீளப்பெறுவதற்கான விண்ணப்பமொன்றை உற்பத்தியாளர் அல்லது அவரது சார்பில் எவரேனும் ஆள் விதிக்கப்பட்ட முறையில் செய்வாரென்பது எவரேனுமுற்பத்தியாளருக்குப் பணத்தை மீளப் பெறும் உரிமைக்கான நிபந்தனையொன்றாதல் வேண்டும்.

**7.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்களை அமைச்சர் காலத்துக்குக்காலம் விதிக்கலாமென்பதோடு அவ்வாறு விதிக்கப்பட்ட ஏதேனும் படிவம் காலத்திற்குக்காலம் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

**8.** உற்பத்தியாளர் ஒருவரின் தனியான சேமிப்புக் கணக்கின் வரவிலுள்ள ஏதேனும் தொகையினைச் சாட்டுதல்செய்தல் ஒவ்வொன்றும் அல்லது அதன் மீதான பொறுப்பு ஒவ்வொன்றும் அத்தகைய ஏதேனும் தொகையை சாட்டுதல் செய்வதற்கான அல்லது பொறுப்பாக்குவதற்கான உடன்படிக்கை ஒவ்வொன்றும் வறிதாதல் வேண்டுமென்பதோடு, அவ்வுற்பத்தியாளர் தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தினால் கடனிருக்க வகையற்றவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, ஏதேனும் அத்தகைய தொகை கடனிறுக்க வகையின்மைக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், உற்பத்தியாளருக்குக் கடன் கொடுத்தோர் சார்பில் செயலாற்றும் சாட்டுதல் பெற்றவர் எவரையும் சென்றடைதலாகாது.

**9.** *(1)* அமைச்சரானவர், இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது அவற்றிற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சராலாக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்படக்கூடியவாறுன அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சராலாக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் எவ்வளவு விரைவாக வசதியோ அவ்வளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனத் தேசிய அரசுப் பேரவை முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும். அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனல் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**10.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தி நின்றாலன்றி —

''அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனேக்காரர்'' என்பது 1971ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, நெல் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின் கருத்தெல்லேக்குட்பட, அதிகாரமளிக்கப்பட்ட நெல் கொள்வனேக்காரர் ஒருவர் என்று பொருளாகும் ;

''உற்பத்தியாளர்'' என்பது 1958ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நெற்காணிகள் சட்டத்தின் கருத்தெல்லேக்குட்பட எவரேனும் வாரத்துக்குப் பயிரிடுவோர், சொந்த நிலத்தைப் பயிரிடுவோர் அல்லது காணிச் சொந்தக்காரர் என்று பொருளாகும். ஆனல் அமைச்சரினல் விதிக்கப்பட்டன தவிர, கூட்டிணேக்கப்பட்ட அல்லது கூட்டிணேக்கப்படாத எவையேனும் ஆட்கள் குழுக்களே உள்ளடக்காது ;

''நெல் சந்தைப்படுத்தற் சபை'' என்பது 1971ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, நெல் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தற் சபை என்று பொருளாகும் ;

''விதிக்கப்பட்ட'' என்பது இச்சட்டத்தின் கீழாக்கப்படும் ஒழுங்கு விதிகளினல் விதிக்கப்பட்ட என்று பொருளாகும்.

# 1973 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இரத்தினக்கல் (மன்னிப்பு) சட்டம்

வருமானவரி அல்லது வியாபார மொத்தவரவுவரி எந்தப்பணங்கள் தொடர்பில் செலுத்தப்படாது தட்டிக்கழிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணங்களைக் கொண்டு வாங்கப்பட்ட இரத்தினக்கற்களை அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்கின்ற, அல்லது வெளி நாட்டு நாணயத்தை விலையாகப் பெற்றுக்கொண்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு விற்பனை செய்கின்ற அல்லது அவற்றை ஏற்றுமதி செய்கின்ற ஆட்கள், குற்றவழக்குத் தொடரப்படுவதற்கு ஆளாகாதவாறும் வருமானவரி அல்லது வியாபார மொத்தவரவுவரி செலுத்துதற்காளாகாதவாறும் அவர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டம்.

*1973ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

1. இச்சட்டம் 1973 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இரத்தினக்கல் (மன்னிப்பு) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அமைச்சினல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. குறிப்பிட்ட வருமானத்திலிருந்து அல்லது மொத்த வரவிலிருந்து ஏதாவது இரத்தினக்கல்லைக் கொள்வனவுசெய்த எந்தவோர் ஆளாவது,—

(அ) இயைபான காலத்திற்குள் அத்தகைய இரத்தினக்கல்லை அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்திற்கு விற்குமிடத்து, அல்லது இரத்தினக்கல் வியாபாரியாக இருக்க அவருக்கு அதிகாரமளித்து 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை உடையவராய் இருந்து கொண்டு வெளிநாட்டு நாணயத்தை விலையாகப் பெற்று உல்லாசப் பிரயாணியொருவருக்கு அத்தகைய இரத்தினக்கல்லை விற்குமிடத்து, அல்லது

(ஆ) இயைபான காலத்திற்குள் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் மூலம், அல்லது 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதாவது கட்டளையின் அதிகாரத்தின் கீழும் அக்கட்டளையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கவும் அத்தகைய இரத்தினக்கல்லை ஏற்றுமதி செய்யுமிடத்து, அப்பொழுது,

அத்தகைய ஆள் அத்தகைய இரத்தினக்கல்லைக் கொள்வனவு செய்ததற்கு அத்தகைய ஆளினற் செலுத்தப்பட்ட தொகையென உண்ணுட்டு அரசிறை ஆணையாளரின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டதான தொகையினதும், அத்தகைய விற்பனையில் அல்லது ஏற்றுமதியில் உறப்பட்ட எவையேனும் செலவுகளுக்காக நியாயமான தொகை என உண்ணுட்டு அரசிறை ஆணையாளர் கருதும் தொகையினதும் கூட்டு மொத்தத்திற்குச் சமனுனதாகவுள்ள குறிப்பிடப்பட்ட வருமானத்தின் அல்லது மொத்த வரவின் அத்தகைய தொகை தொடர்பில்—

*(1)* வருமானவரி அல்லது வியாபார மொத்த வரவுவரி செலுத்துவதற்கு, அல்லது

*(2)* வருமானவரி அல்லது வியாபார மொத்த வரவுவரி தொடர்பான சட்டத்தின் கீழ் ஏதாவது தவறுக்கான குற்றவழக்கிற்கு,

ஆளாதலாகாது:

ஆயின், எவ்வாருயினும், ஏதாவது அத்தகைய வருமானவரி அல்லது வியாபார மொத்த வரவுவரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளுள் எதற்குமெதிராகச் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் அல்லது சந்தேகிக்கப்படும் மீறுதலுக்கான நுண்ணுய்வுகள் இச்சட்டம் ஆக்கப்படும் தேதிக்கு முன்பு தொடங்கப்பட்டிருந்தால், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள ஏதாவது, வருமானவரி அல்லது வியாபார மொத்த வரவுவரி தொடர்பான சட்டத்தின் கீழ் அத்தகைய ஆள் வருமானவரி அல்லது வியாபார மொத்த வரவுவரி செலுத்துவதற்கு அல்லது குற்றவழக்குத் தொடரப்படுவதற்கு ஆளாவதனைப் பாதித்தலோ, அல்லது அத்தகைய ஏதேனும் சட்டத்துக்கெதிராகச் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் ஏதேனும் மீறுதலுக்காக அத்தகைய ஆளுக்கு எதிராக ஏதாவது நீதிமன்றத்தில் இச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவுருதிருக்கும் ஏதாவது வழக்கு அல்லது குற்றவழக்கு தொடர்ந்து நடாத்தப்படுவதனைப் பாதித்தலோவாகாது.

3. இச்சட்டத்தில் —

''அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்'' என்பது 1971ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும் ;

''இயைபான காலம்'' என்பது இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து தொடங்கும் மூன்று மாதகாலம் என்று பொருளாகும்;

'இரத்தினக்கல்'' என்பது 1971ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்திலுள்ள வாறுன அதே பொருளை உடையது ;

''உல்லாசப் பிரயாணி'' என்பது இலங்கைக் குடியாக இல்லாத வரும், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவோர் அலுவலரினுல் அவருக்கு வழங்கப்பட்ட புறக்குறிப்பையுடைய செல்லுபடியாகும் கடவுச்சீட்டினையுடையவருமான எவரேனும் ஆள் என்று பொருளாகும் ;

''குறிப்பிட்ட வருமானம் அல்லது மொத்த வரவு'' என்பது ஆளொருவர், அவரது அவ்வருமானம் அல்லது மொத்த வரவுபற்றி விபரத்திரட்டொன்றைச் செய்யாததாகவுள்ள அல்லது அத்தகைய ஏதேனும் விபரத் திரட்டில் தெரி விக்கத் தவறிய வருமானம் ஆகவுள்ள அல்லது மொத்த வரவாகவுள்ள, அவரின் வருமானம் அல்லது அவரினுல் கொண்டு நடாத்தப்படும் வியாபாரமொன்றன் மொத்த வரவு என்று பொருளாகும்; அத்துடன்

''வெளிநாட்டு நாணயம்'' என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறுன அதே பொருளை உடையது.

# 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டம்

குறித்துரைக்கப்பட்ட பயிர்களுக்கும் பண்ணை விலங்குகளுக்குமான கமத் தொழிற் காப்புறுதித் தொழிலைப் பொறுப்பேற்பதற்கெனக் கமத்தொழிற் காப்புறுதிச் சபை என அறியப்படும் சபையொன்றைத் தாபிப்பதற்கு ஏற் பாடுசெய்வதற்கும், 1961 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கப் பயிர்க் காப்புறுதிச் சட்டத்தை நீக்குவதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.

*1973 யூலை மாதம் 11 ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

*1.* இச்சட்டமானது *1973* ஆம் ஆண்டின் *27* ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்ச ரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## கமத்தொழிற் காப்புறுதிச் சபையைத் தாபித்தல்

**2.** (1) (இதன்கண் இதன்மேல் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கமத்தொழிற் காப்புறுதிச் சபை என அழைக்கப் படவேண்டிய சபையொன்று தாபிக்கப்படல் வேண்டும் என் பதுடன் அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(அ) அமைச்சரால் நியமிக்கப்படும் தவிசாளர் ;

(ஆ) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவரான அவ்வமைச்சின் அலுவலர் ஒருவர் ;

(இ) கமத்தொழிற் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் ;

(ஈ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் ;

(உ) மக்கள் வங்கியின், இலங்கை வங்கியின் அல்லது அரசாங் கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வேறு வங்கியின் அலுவலர் ஒருவர்; அத்தகைய வங்கி, அமைச்சரினாற்

தீர்மானிக்கப்பட்டதாக விருக்கும்; அத்தகைய அலுவலர் அவ்வங்கியின் பணிப்பாளர்சபைத் தவிசாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராகவிருப்பார் ;

(ஊ) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அக்கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவர்; அத்துடன்

(எ) நெல் சந்தைப்படுத்தற் சபையின் தவிசாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அச்சபையின் அலுவலர் ஒருவர்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும், அத்துடன் அது அத்தகைய பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

3. (1) சபையின் தவிசாளர், (2) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, மூன்றாண்டுக்காலமொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்கும் அவர் தகுதியுள்ளவராவார்.

(2) சபையின் தவிசாளரைப் பதவியினின்றும் அகற்றுதல் உசிதமானதென அமைச்சர் கருதின், சபையின் தவிசாளரை அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், பதவியினின்றும் அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுகை நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(3) தவிசாளர், ஏதேனும் காரணத்தினால் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் பொருத்தமானவோர் ஆளை நியமிக்கலாம்.

(4) நிதியென்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும் அத்தகைய வீதங்களிலும் சபையின் தவிசாளருக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர் அமைந்தவராதலும் வேண்டும்.

(5) சபையின் தவிசாளர் அமைச்சரை விளித்துக் கடிதமெழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(6) சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் சபையின் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன், மேற்சொல்லப் பட்டவற்றிற்கு அமைய, சபையானது அதன் சொந்த நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

(7) சபையானது, அதன் உறுப்பினர்கள் மத்தியிலான ஏதே னும் வெற்றிடத்தைப் பொருட்படுத்தாது, செயற்படலாம்.

4. சபையின் அலுவல்கள், தொழிற்பாடு என்பவற்றின்மீதான பொது மேற்பார்வையும் கட்டுப்பாடும் அவற்றின் நிருவாகமும் சபையின் உறுப்பினர்களுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

5. *(1)* சபையின் இலச்சினை சபையினது கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) சபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினையானது, சபையினது உறுப்பினர்கள் இருவரது முன்னிலையில்லாது ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் பொறிக்கப்படுதல் ஆகாது. அவர்கள் இருவரும் தாம் அவணிருந்தனர் என்பதற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

6. சபை அதனது கடமைகளைப் புரிதல் பற்றியும் தத்துவங் களைப் பிரயோகித்தல் பற்றியும் அமைச்சர் எழுத்திலாய அத்த கைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை, விடுக்கலாம் என்பதுடன் அத்தகைய சபை அத்தகைய பணிப்புகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

7. (1) சபையானது அதன் பணிகளைத் திறமையாக நிறை வேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவ வலர்களையும் சேவையாளர்களையும் சபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

(2) சபையின் வேண்டுகோளின்பேரில், அரச சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செய லாளரினதும் சம்மதத்துடன் சபையினால் அதையொத்த சம்மதத் துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(3) அரச சேவையிலுள்ள அலுவலர் எவரும் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார்ப் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(4) அரச சேவையிலுள்ள அலுவலர் எவரும் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார்ப் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, ஏற்ற மாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(5) சபையானது குறிக்கப்பட்ட காலமொன்றிற்கென அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ளவரான ஆள் எவரையும் வேலைக்கமர்த்துமிடத்து, அவ்வாளினுல் சபைக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தினுலான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படல் வேண்டும்.

(6) சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச்சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அரச அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்.

8. சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்ருகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

9. பின்வருவன சபையினது பொதுவான குறிக்கோள்களாகும்:—

(அ) நெற்பயிர் தொடர்பிலும், அமைச்சரால், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்படக்கூடிய வாருன (இதன்கண் இதன்மேல் ''குறித்துரைக்கப்பட்ட பயிர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வேறு பயிர்கள் தொடர்பிலும், பண்ணை விலங்குகள் தொடர்பிலும் கமக்காரர்களின் நலனுக்கென, இழப்புக்கெதிராக அவர்களுக்கு இழப்பீடு செய்வதும், பண்ணை மூலம் பெறப்படும் வருவாயை உறுதியாக்குவதற்கு ஏற்பாடு செய்வதும், கமத்தொழில் விளைச்சலை

மேம்படுத்துவதுமான, விரிவான கமத்தொழிற் காப்புறுதித் திட்டமொன்றைச் செயற்படுத்தல்; அத்துடன்

(ஆ) அத்தகைய கமத்தொழிற் காப்புறுதியை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமான ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்.

**10.** *(1)* சபையானது பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம்.—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறு விதத்தில் கையுதிர்த்தல்;

(ஆ) கமத்தொழிற் காப்புறுதித் தொழிலின் எல்லா அமிசங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நடாத்தலும் அவ்வாராய்ச்சிக்கு உதவியளித்தலும் அதனை ஊக்குவித்தலும் ;

(இ) சபையின் கடமைகளைப் புரிதற்கும் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும், நேரடியாக அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலம் செய்துகொள்ளுதலும் நிறைவேற்றுதலும் ;

(ஈ) சபையினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் திறனை முன்னேற்றும் நோக்கத்திற்காக எதையும் செய்தலும், சபையின் வேலையை நிறைவேற்றும் பொறுப்புள்ள ஆட்களுக்குப் பயிற்சியளித்தற்கான வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(உ) சபையின் தொழிலைத் திறமையாக நடாத்துவதற்கு அவசியமெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய பணிகளைப் புரிவதற்குச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது எவரேனும் அரச அலுவலருக்கு அதிகாரமளித்தல் ;

(ஊ) சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம், பதவி உயர்வு, ஊதியம், ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை, அவர்களுக்கு லீவு வழங்கல் என்பன உட்பட அதன் அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(எ) சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன், பகிரங்கக் கூட்டுத் தாபனத்துடன், தேசிய அரசுப் பேரவையினது 1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கமத்தொழில் விளைவுப்பெருக்கச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கமத் தொழில் விளைவுப்பெருக்கக் குழுவுடன் அல்லது அத்தகைய குழுவின் எவரேனும் முகவருடன் அல்லது தேசிய அரசுப் பேரவையினது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பெற்ற ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்துடன் கூட்டுத் திட்டங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ஏ) சபையினது அலுவல்களை நிருவகித்தல் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஐ) சபையின் அபிப்பிராயப்படி, அதன் தொழிலை முறையாகக் கொண்டுநடாத்த வசதியளிப்பதற்கு அசிவயமான மற்றெல்லா விடயங்களையும் செய்தல்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அதன் மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களையும் கடமைகளையும் திறமையாக நிறைவேற்றுதல் தொடர்பிலும் அவற்றைப் புரிதல் தொடர்பிலுமான ஏதேனும் நோக்கத்திற்காக, அங்ஙனம் செய்வது உசிதமானதென அமைச்சர் திருப்திப்படின், அவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய, ஏதேனும் பொறுப்புமுயற்சியை அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துமாறு அல்லது அத்தகைய முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்யுமாறு சபைக்கு அதிகாரமளிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு கட்டளையும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக, அங்கீகாரத்திற்கெனத் தேசிய அரசுப் பேரவை முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அங்ஙனம் அங்கீகரிக்கப்படாத கட்டளையெதுவும், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத தேதியிலிருந்து, ஆனால், அதன் கீழ் முன்னர் செய்யப்பட்டதெதற்கும் பங்கமின்றி, அழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அவ்வாறு அழிக்கப்படாத கட்டளையொவ்வொன்றும், அது இதன்கண் சட்டமாக்கப்பட்டாற் போன்று செல்லுபடியானதும் பயனுடையதுமாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும், அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டமெதனையும் சபை புறக்கணிப்பதற்கு அதிகாரமளிப்பதாகப் பொருள்கொள்ளப்படல் ஆகாது.

## பாகம் II

### நெற்பயிரைக் கட்டாயமாகக் காப்புறுதி செய்தல்

**11.** *(1)* இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சரால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் இடப்பரப்பிலுள்ள நெற்பயிரில் அக்கறையுடைய ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான (இதன்கண் இதன்மேல் ''குறித்துரைக்கப்பட்ட காரணம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதாய) ஏதேனும் அத்தகைய காரணத்தால் எழுகின்றதான அத்தகைய பயிருக்கான இழப்புக்கெதிராகச் சபையுடன் காப்புறுதியொப்பந்தமொன்றைச் செய்துகொண்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*(2)* ஒராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, நெற்பயிரில் அக்கறையுடைய ஆளொருவர் என்பது, சொந்தக்காணியில் பயிரிடுபவர், குத்தகைக்குப் பயிரிடுபவர், குத்தகைக்குப் பயிரிடுவோரையுடைய நிலக்கிழார், அத்துடன் கமத்தொழிலாளர்களையுடைய நிலக்கிழார் ஒருவரென்று பொருளாதல் வேண்டும் என்பதுடன், *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் காப்புறுதியொப்பந்தமொன்றைச் செய்துகொண்டவராகக் கருதப்படும் அத்தகைய ஆளெவரும் இதன்கண் இதன்மேல் ''காப்புறுதி செய்துகொண்ட ஆள்'' எனக் குறிப்பீடு செய்யவும்படுவர்.

இவ்வுட்பிரிவில், ''சொந்தக் காணியில் பயிரிடுபவர்'', ''குத்தகைக்குப் பயிரிடுபவர்'' ''நிலக்கிழார்'', ''கமத்தொழிலாளர்கள்'' என்பன, 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டத்திலுள்ள அதே பொருளினைக் கொண்டிருக்கின்றன.

*(3)* இழப்புக்கான சாத்தியக்கூறு மிக அதிகமானதெனக் கருதப்படும் ஏதேனும் இடப்பரப்பை அல்லது நிலப்பரப்பை, சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இப்பிரிவின் ஏற்பாடுகளினின்றும் விலக்கலாம்.

**12.** *(1)* காப்புறுதி செய்து கொண்ட ஆட்களினால் செலுத்தப்படவேண்டிய கட்டுப்பணத்தொகையைச் சபையானது தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அத்தொகையை அது காலத்திற்குக் காலம் மாற்றலாம்.

*(2)* இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட காப்புறுதி செய்துகொண்ட ஆட்கள் நெற்பயிரில் பங்குகளைக் கொண்டிருக்குமிடத்து,

அத்தகைய காப்புறுதிசெய்துகொண்ட ஆள் ஒவ்வொருவராலும் செலுத்தப்படற்பாலதான கட்டுப்பணமானது, சபையின் தவிசாளரினுல், அத்தகைய காப்புறுதி செய்துகொண்ட ஆள் ஒவ்வொருவரும் எவ்வளவு பங்குக்கு உரித்துடையவர் என்பதைக் கருத்திற்கொண்டு, தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(3) அத்தகைய கட்டுப்பணமானது பணமாகச் செலுத்தப்படலாம், அல்லது அக்கட்டுப்பணத்தொகைக்குச் சமமான பெறுமதியையுடைய அளவினதான நெல்லாகச் செலுத்தப்படலாம். அத்தகைய பெறுமதியானது, அத்தகைய பயிருக்கு உத்தரவாத விலேத்திட்டம் ஏற்புடையதாயின் அத்திட்டத்தின்கீழ் நெல்லினது அப்போதைய விலேக்கிணங்க அல்லது, அத்திட்டம் அத்தகைய பயிருக்கு ஏற்புடையதல்லதாயின், அக்கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டிய ஆண்டுக்கு நேர்முந்திய மூன்ருண்டுகள் கொண்ட காலத்தின் போது அத்தகைய பயிரின் சந்தைவிலேகளின், சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாருன அத்தகைய சராசரிக்கிணங்கக் கணக்கிடப்படும்.

(4) நெற்பயிருக்கு உத்தரவாதவிலேத் திட்டம் ஏற்புடையதாகுமிடத்து, நெல் சந்தைப்படுத்தற் சபையினுல் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனேகாரரால் அத்திட்டத்தின்கீழ் கொள்வனே செய்யப்பட்ட அப்பயிரினது ஏதேனும் அளவின் விலேயாகக் காப்புறுதி செய்துகொண்ட ஆளுக்குச் செலுத்தப்படவேண்டிய தொகையினின்றும், காப்புறுதி செய்துகொண்ட ஆளினுல் கமத்தொழிற் காப்புறுதிச் சபைக்கு இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணத்தொகையை, கமத்தொழிற் காப்புறுதிச் சபையின் வேண்டுகோளின்பேரில் கழித்தல், விடயத்திற்கேற்றுற்போல், நெல் சந்தைப்படுத்தற் சபைக்கு அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனேகாரர்களுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(5) கட்டுப்பணத்தின் முழுத்தொகையாக அல்லது பகுதியாக ஏதேனும் பணத்தொகையைச் செலுத்தவேண்டியவரான காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவர், சபையினுல் அனுமதிக்கப்பட்ட காலவெல்லேக்குள்ளாக அப்பணத்தொகையைச் செலுத்தத்தவறின், அப்பணத்தொகை தவணே தவறிய தொகையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாருன அத்தகைய வீதத்தில் வட்டியாக விதிக்கப்படும் மேலதிகக் கட்டணத்துடன் சேர்த்து அப்பணத்தொகையானது, சபையினுல் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால், எந்நெல்நிலப் பரப்பு தொடர்பிலான கட்டுப்பணம் தவணே தவறியுள்ளதோ, அந்நெல் நிலப்பரப்பு அமைந்துள்ளதான இடத்தின் மேல் நியாயாதிக்கமுள்ளதான கிராம நீதிமன்றத்திற்கு, அல்லது அவ்விடத்தின்மேல்

நியாயாதிக்கமுள்ள கிராமநீதிமன்றம் எதுவும் இல்லாதவிடத்து, அவ்விடத்தின்மேல் நியாயாதிக்கமுள்ளதான ஒரு நீதிவான் நீதி மன்றத்திற்கு, செய்யப்படும் விண்ணப்பத்தின் மேல், அத்தகைய நீதிமன்றத்தினல் விதிக்கப்பட்ட குற்றப்பணம் அறவிடப்படும் அதே விதத்தில், அறவிடப்படுதல் வேண்டும். அத்துடன், அவ்வாறு அறவிடும் நோக்கங்களுக்காக, அத்தகைய கட்டுப்பணம் எந்நிலப் பரப்பு தொடர்பிற் செலுத்தப்படவேண்டியதோ அந்நிலப்பரப் பிலிருந்து பெற்றவிளைச்சலும் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப் படுவதற்கு உரியதாதல் வேண்டும்.

*(6)* ஐந்தாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சான்றிதழில் குறிக்கப்பட்ட பணத்தொகையானது காப்புறுதிசெய்துகொண்ட ஆளிடமிருந்து சபைக்கு வருமதியாக உள்ளது எனக்கூறுவதும், சபையினல் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கைப்பட வழங்கப்பட்டதுமான ஒரு சான்றிதழானது, அத்தகைய பணத்தொகை அத்தகைய ஆளிடமிருந்து சபைக்கு வருமதியாக உள்ளது என்பதற்கு முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

**13.** ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட காரணத்தினல், நிலப்பரப் பொன்றிலுள்ள நெற்பயிருக்கு இழப்பு ஏற்படுமிடத்து, காப்புறுதி செய்துகொண்ட ஆள் அத்தகைய இழப்பு நேர்ந்த ஏழு நாட் களுக்குள்ளாக, அத்தகைய நிலப்பரப்பு சபையினல் நியமிக்கப் பட்ட எந்த முகவரின் நியாயாதிக்க இடப்பரப்பினுள் அமைந் துள்ளதோ அந்தமுகவருக்கு அத்தகைய இழப்புத் தொடர்பாக இழப்பீட்டுக்கென எழுத்திலான கோரிக்கையொன்றைச் சமர்ப் பித்தல் வேண்டும்.

**14.** *(1)* நெற்பயிருக்கான இழப்புத் தொடராகச் செலுத்தப் படவேண்டிய இழப்பீட்டுத்தொகை அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட வேண்டிய வாறன அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

*(2)* கட்டுப்பணத்தைச் செலுத்தும் நோக்கத்திற்காகக் காப் புறுதி செய்துகொண்ட ஆளொருவருக்குக் கடன் வழங்கியுள்ள அங்கீ கரிக்கப்பட்ட கடன்வழங்கு முகவர் நிலையமொன்றுக்குப் போகு மதியாகவுள்ள பணத்தொகை எதுவும், காப்புறுதி செய்து கொண்ட அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படவேண்டிய இழப் பீட்டுத் தொகையினின்றும் கழிக்கப்படலாம்:

**15.** *(1)* சபையினல் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலு வலரொருவர் காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவரினல் இழப் பீட்டுக்கெனச் செய்யப்பட்ட கோரிக்கையை நிராகரிக்குமிடத்து,

அல்லது அத்தகைய அலுவலர் எவரினுலும் தமக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையையிட்டுக் காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவர் திருத்தியுருதவிடத்து, காப்புறுதி செய்துகொண்ட அத்தகைய ஆள், விடயத்திற்கேற்றவாருக, அக்கோரிக்கை நிரா கரிக்கப்பட்டமைபற்றிய அல்லது அவ்விழப்பீட்டைத் தமக்கு வழங் கும் அறிவித்தல் தமக்கு கொடுக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக, மேன்முறையீட்டுக்கான காரணங்களைக்கூறி, சபைக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழான ஏதேனும் மேன்முறையீட்டின்மீது சபையின் முடிவு முற்முனதும் இறுதியானதுமாதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும். ஆகாது.

**16**. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்களுக்காக, ஏதே னும் காலபோகம் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய இழப் பீடுகளின் தொகை மொத்தக் காப்புறுதிப் பொறுப்பின் பதி னைந்து சதவீதத்தை விஞ்சாதவிடத்து, அத்தகைய தொகை கமத்தொழிற் காப்புறுதி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அத்தகைய தொகை, மேற்சொல்லப்பட்ட பதினைந்து சத வீதத்தை விஞ்சுமிடத்து, அத்தகைய பதினைந்து சதவீதத்திற் குச் சமமானதாயுள்ள அத்தகைய தொகையின் பாகம் கமத் தொழிற் காப்புறுதி நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண் டும் என்பதுடன், அத்தகைய தொகையின் மீதம் அந்நோக் கத்திற்கென அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பணத்திலி ருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவில், ''மொத்தக் காப்புறுதிப் பொறுப்பு'' என் பது ஏதேனும் பயிர்ச் செய்கைக் காலபோகத்தில் நெல் பயிரி டப்பட்டுள்ள காணியின் காப்புறுதி செய்துகொள்ளப்பட்ட மொத்த ஏக்கரளவினை, செலுத்தப்படவேண்டிய ஆகக்கூடிய இழப்பீட்டுத் தொகையினல் பெருக்கிவரும் தொகையென்று பொருளாகும்.

## பாகம் III

## வேறு பயிர்களையும் பண்ணைவிலங்குகளையும் இச்சைவழியாகக் காப்புறுதி செய்தல்

**17**. எப்பயிர் அல்லது பயிர்கள் தொடர்பிலும் பண்ணைவிலங் கின் எவ்வினங்கள் தொர்பிலும் சபையினல் இச்சைவழிக் காப் புறுதி ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்பதை அமைச்சர், கசெற் றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், காலத்திற்குக்காலம் தீர் மானிக்கலாம்.

**18.** சபையானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஏதேனும் பயிரை அல்லது பண்ணைவிலங்கு இனத்தைக் காப்புறுதி செய்வதற்கு விண்ணப்பிக்கின்ற ஆள் ஒவ்வொருவருக்கும்—

(அ) காப்புறுதி செய்துகொண்டவரின் பெயர் ;

(ஆ) காப்புறுதியின் விடயப்பொருள் ;

(இ) காப்புறுதி செய்யப்பட்ட பணத்தொகை ;

(ஈ) காப்புறுதி செய்துகொண்ட காலவளவு ;

(உ) காப்புறுதி செய்துகொண்ட இழப்புக்கான காரணங்கள் ; அத்துடன்

(ஊ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள், விலக்குகள், நிபந்தனைகள், புறக்குறிப்புகள்,

என்பனவற்றைக் கொண்டுள்ள காப்புறுதிப்பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும்,

**19.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், அரசாங்கத்துடன் அல்லது மறுகாப்புறுதித் தொழிலை மேற்கொள்ளும் ஏதேனும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனத்துடன் மறுகாப்புறுதி ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம்.

## பாகம் IV
## நிதி

**20.** (1) சபையின் தொடக்க மூலதனம் இருபது லட்சம் ரூபாவாதல் வேண்டும்.

(2) சபையின் தொடக்க மூலதனமானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரின் அங்கீகாரத்துடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினால் காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்படலாம்.

(3) சபையின் தொடக்க மூலதனப் பணத்தொகையும், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய மூலதனத்தின் ஏதேனும் அதிகரிக்கப்பட்ட பணத்தொகையும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சர், அமைச்சருடனான ஆலோசனையுடன் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தவணைப்பணங்களில் திரட்டுநிதியத்திலிருந்து சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) சபையின் தொடக்கமூலதனத்திற்கு அல்லது அதன் அதிகரிக்கப்பட்ட தொகைக்கு திரட்டுநிதியத்திலிருந்து கொடுப்பனவொன்றைச் செய்தபின்னர் இயன்றவரையில் விரைவாக, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சர் அத்தகைய கொடுப்பனவுபற்றிய கூற்றென்றைத் தேசிய அரசுப் பேரவையின்முன் வைத்தல் வேண்டும்.

21. (1) (இதன்கண் இதன்மேல் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கமத்தொழிற் காப்புறுதி நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) சபையினல் பயன்படுத்தப்படுவதற்கெனத் தேசிய அரசுப் பேரவையினல் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக் கூடியவாருன அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) சபையினல், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலிலும், ஆற்றுதலிலும், புரிதலிலும் பெறப்பட்ட அத்தகைய எல்லாப்பணங்களும் ;

(இ) 1961 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பயிர்க் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காப்புறுதி நிதியத்தின் வரவிலிருக்கும் எல்லாப் பணத்தொகைகளும்,

அந்நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலிலும், ஆற்றுதலிலும், புரிதலிலும் அதனல் உறப்பட்ட ஏதேனும் செலவைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தினல் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியிலிருந்து செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய எல்லாப்பணத் தொகைகளும் அந்நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

22. சபையின் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஊதியமும் படிகளும், அத்துடன் இச்சட்டத்தை நிருவகிப்பதில் உறப்பட்ட மற்றெல்லாச் செலவுகளும் அந்நோக்கத்திற்கெனத் தேசிய அரசுப் பேரவையினல் ஏற்பாடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

23. (1) அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சர் ஆகிய இருவரினதும் ஒருப்பாட்டுடன், அல்லது அதையொத்த ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்டதான ஏதேனும்

பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்கச் சபையானது, அதன் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்காக அல்லது அதன் குறிக் கோள்களை நிறைவேற்றுவதற்காகச் சபைக்குத் தேவைப்படக்கூடிய வாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்றுமூலம் அல்லது வேறு விதத்தில் கடனெடுக்கலாம் அல்லது கடன்நியதி களின்மேல் இணங்கிப்பெற்றுக்கொள்ளலாம்.

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் சபையினால் பெற்றுக்கொள்ளப் பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள பணத்தொகையின் கூட்டுமொத்தமானது, நிதி என்னும் விட யத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகையை எக்காலத்திலாயினும் விஞ்சுதலாகாது.

*(2)* சபையானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக விருக்கும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சராற் கொடுபடும் சம்மதத்துடன் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் நோக் கங்களுக்காக *(1)* ஆம் உட்பிரிவின்கீழான கடன் என்றவகையி லன்றி வேறுவிதத்தில் பணம் கடனெடுக்கலாம் :—

(அ) சபையின் தொழிலுக்குத் தேவைப்படும் ஏதேனும் அசை வுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைத் தேவைக் கெடுத்தல் அல்லது கொள்ளுதல் ;

(ஆ) ஒராம் உட்பிரிவின்கீழ் கடனெடுக்கப்பட்ட ஏதேனும் பணத் தைத் திருப்பிக்கொடுத்தல்.

**24.** சபையின் தொழில் நோக்கத்திற்கென உடனடியாகத் தேவைப்படாதனவான சபையின் எவையேனும் நிதிகள், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச் சரின் ஒருபாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான கமத்தொழில் அபிவிருத்தியுடன் தொடர் பான அத்தகைய ஏதேனும் நோக்கத்திற்குச் சபையினால் பயன் படுத்தப்படலாம்.

**25.** *1971* ஆம் ஆண்டின் *38* ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், சபையின் நிதிக்கட்டுப்பாடு தொடர் பிலும் கணக்குகள் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற் புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

## பொதுவானவை

**26.** *(1)* இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறை வேற்றும் நோக்கத்திற்காக அல்லது அவற்றிற்குப் பயன்கொடுக் கும் நோக்கத்திற்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர், குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினுல் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், விதித்துரைக்கப்படவேண்டியன என இச்சட்டத்தால் கூறப்பட்டவையான அல்லது தேவைப்படுத்தப்பட்டவையான, அல்லது அவற்றுக்கென ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதியானவரையில் விரைவாக, அங்கீகாரத்திற்கென்று தேசிய அரசுப் பேரவையின் முன் கொணரப்படுதல் வேண்டும். அங்ஙனம் அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதியெதுவும், அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனுல் அதன்கீழ் அதற்குமுன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஓர் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

27. (1) வழக்கு அல்லது குறைவழக்கு எதுவும்—

(அ) இச்சட்டத்தின்கீழ், சபையினுல் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபைக்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபையின் உறுப்பினர், அலுவலர், சேவையாளர், அல்லது முகவர் எவர்க்குமெதிராக,

எடுக்கப்படுதல் ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது எவரேனும் ஆளினுல் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராக எடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவரான அத்தகைய ஆளினுல் உறப்பட்ட செலவுகள் எவையும், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினுல், நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

**28.** *(1)* இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது இச் சட்டத்தின்கீழ் சட்டமுறையாக விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது பணிப்பை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கி யொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்,

*(2)* இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆளொவ்வொரு வரும் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிசாரணையின் பின் னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராண்டை விஞ்சாத காலமொன்றிற்கு இருவகையிலொருவகையான சிறைத்தண்ட னைக்கு, அல்லது ஓராயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றைச் செலுத்தற்கு, அல்லது அத்தகைய குற்றப்பணமும் சிறைத்தண்டனையுமாகிய இரண்டுக்கும், ஆளாதல் வேண்டும்.

*(3)* குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் முத லாம் அட்டவணையில் இதற்கு முரணாகவுள்ளது எது எவ்வாறிருப் பினும், இச்சட்டத்தின்கீழான தவறெவ்வொன்றும் அச்சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குட்படப் பிடியாணையின்றிக் கைது செய்யத்தகு தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(4)* கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் இச்சட்டத்தின்கீழ் தவறெதுவும் புரியபட்டவிடத்து, தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஓர் உறுப்பினராக, பொதுமுகாமை யாளராக, செயலாளராக அல்லது வேறு அதையொத்த அலு வலராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தவறு தமது இசைவு அல்லது மறைமுக ஆதரவு இன்றிப் புரியப்பட்டதெனவும், அத் தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அச்சூழ்நிலையில் அத்தவறின் தன்மையைக் கருத்திற்கொண்டு அவர் பிரயோகித்திருக்கவேண் டியவாறான அத்தகைய எல்லாக் கவனத்தையும் பிரயோகித்தா ரெனவும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்ற வாளியெனக் கருதப்படுதல் வேண்டும்.

**29.** எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் இவைக்கு முரணாகவுள்ள எவை எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்திற்குமிடை யில் ஏதேனும் முரண் அல்லது ஒவ்வாமை காணப்படுகின்ற விடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

**30.** *(1)* குடியரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் சபையினது தொழிலின் நோக்கத்திற்குத் தேவைப்பட்டவிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தைச் சிறப்பு மானியமாக

அல்லது குத்தகையாக வழங்கக்கூடிய நோக்கமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், சிறப்பு மானியமாக அல்லது குத்தகை யாகச் சபைக்கு வழங்கப்பட்ட அத்தகைய ஆதனத்திற்கு ஏற்பு டையனவாதல் வேண்டும்.

(2) குடியரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் சபையினது தொழிலின் நோக்கத்திற்குத் தேவைப்பட்டவிடத்து, அமைச்ச ரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் சபைக்கு மாற்றி அதற்கு உரித்தாக்கலாம்.

(3) சபையினது தொழிலின் நோக்கத்துக்காக ஏதேனும் அசை வற்ற ஆதனம் கொள்ளப்படத் தேவைபடுத்தப்பட்டு, அமைச்சரா னவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் உத்தேசக் கொள் ளுதலை அங்கீகரிக்குமிடத்து, அவ்வாதனம் பொது நோக்கமொன் றுக்கெனத் தேவைப்பட்டதெனக் கருதப்படல் வேண்டும். அத்து டன் அதற்கிணங்க காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் அது கட்டாயமாகக் கொள்ளப்பட்டுச் சபைக்குக் கைமாற்றப்படலாம்.

(4) காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைச் சபைக்கெனக் கொள்ளுதற்காகச் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் பணத்தொகையானது சபையினுல் செலுத் தப்படல் வேண்டும்.

**31.** இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் இழப்பீடு கொடுக்கப்படவேண் டியவரான ஆளெவரும் அத்தகைய இழப்பீட்டைப் பெறுதற்கு முன் இறக்குமிடத்து, சபையானது, அத்தகைய இழப்பீடு எழுநூற் றைம்பது ரூபாவை விஞ்சுகிறதா அல்லதா என்பதற்கேற்றவாறுக, அவ்விழப்பீடு தொடர்புபட்ட காணி எம்மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது எவ்விண்ணப்ப நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்திற் குள் முழுவதுமாக அல்லது பிரதானமாக அமைந்துள்ளதோ அந் நீதிமன்றத்திற்கு, அதற்குரித்தான ஆட்களால் பெற்றுக்கொள்ளப் படுவதற்கென அத்தகைய இழப்பீட்டைச் செலுத்தலாம்.

**32.** இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திர மொன்றை உடையவர் அல்லது உடையவர்கள், அத்தகைய காப் புறுதிப் பத்திரம் தொடர்புபட்ட நிலப் பரப்பில் குறித்துரைக்கப் படும் ஏதேனும் பயிரை வளர்த்தல் தொடர்பான ஏதேனும் நோக் கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன்முகவர் நிலையத்தினுல் அத்தகைய காப்புறுதிப் பத்திரம் உடையவருக்கு அல்லது உடையவர் களுக்கு வழங்கப்படும் கடனென்றுக்கான பிணையாக அத்தகைய காப்புறுதிப்பத்திரத்தை, அத்தகைய முகவர் நிலையத்துக்குச் சாட்டுதல் செய்யலாம்.

**33.** இதற்கு முரணுக எழுத்திலான வேறேதேனும் சட்டத்திலுள்ளது எதுவும் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் ஆளெவருக்கும் இழப்பீடாகப் போகுமதியான பணத்தொகையெதுவும், குடியரசுக்கு அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையத்திற்குப் பணத்தொகையொன்றைச் செலுத்துதற்கான தீர்வையொன்றை அல்லது கட்டளையொன்றைத் தவிர, நீதிமன்றம் எதனலும் வேறு தீர்வையொன்றை அல்லது கட்டளையொன்றை நிறைவேற்றுதற்காகக் கைப்பற்றப்படுதல் அல்லது நடுக்கட்டப்படுதல் ஆகாது.

**34.** ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் கொடுக்கப்படவேண்டிய ஏதேனும் இழப்பீட்டுக்கு உரித்துடையராயிருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் முகவர் நிலையத்தால் அவ்வாளுக்கு வழங்கப்பட்ட கடனென்றன் முழுமையான அல்லது பகுதியளவிலான திருப்பிக்கொடுப்பனவாக அல்லது அக்கடன்மீதான ஏதேனும் வட்டியின் கொடுப்பனவாக, அவ்வாளிடமிருந்து அத்தகைய முகவர் நிலையத்துக்கு ஏதேனும் பணத்தொகை போகுமதியாகவுள்ளதெனச் சபை திருப்திப்பட்டவிடத்து, சபையானது, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையத்துக்குப் போகுமதியான பணத்தொகை அத்தகைய இழப்பீட்டுப்பணத்தொகையிலிருந்து கழிக்கப்படவும் அத்தகைய முகவர் நிலையத்துக்கு அனுப்பப்படவும் செய்விக்கலாம்.

**35.** காப்புறுதி செய்துகொண்ட ஆளெவரினதும் உரிமையும் உரித்தும், அக்கறையும், வேறெவரேனும் ஆளுக்கு மாற்றப்படுமிடத்து, மாற்றம் பெறுநர், மாற்றுநரின் எல்லா உரிமைகளுக்கும் உரித்துடையராதல் வேண்டும் என்பதுடன் மாற்றப்படும் தேதியிலிருந்து மாற்றுநரின் நிலுவையாகவுள்ள கடப்பாடுகள் எல்லாவற்றிற்கும் அமைந்தவராதலும் வேண்டும்.

**36.** காப்புறுதி செய்துகொண்டவர்—

(அ) காப்புறுதி தொடர்பில், ஏதேனும் முக்கியமான நிகழ்வை மறைத்திருப்பின் அல்லது திரித்துக் கூறியிருப்பின் அல்லது ஏதேனும் மோசடியைச் செய்திருப்பின், அல்லது

(ஆ) அத்தகைய ஒப்பந்தத்தின் ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்குயொழுகத் தவறின்.

இச்சட்டத்தின் கீழான காப்புறுதி ஒப்பந்தம் வறிதானதாகிவிட்டதெனச் சபை வெளிப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் செலுத்தப்பட்ட கட்டுப்பணமானது பறிமுதல் செய்யவும்படலாம்.

**37.** (1) இச்சட்டத்தின் கீழான காப்புறுதி ஒப்பந்தமொன்றன் கீழ் ஏதேனும் கட்டுப்பணத் தொகையானது, காசாக, அல்லது அவ்வொப்பந்தம் தொடர்பில் குறித்துரைக்கப்படும் பயிர் விளைச்ச லாக, அல்லது ஒரு பகுதி காசாகவும் மறு பகுதி அவ்வாறு குறித்துரைக்கப்படும் பயிர் விளைச்சலாகவும் செலுத்தப்படுதல் வேண்டும்,

(2) சபையானது, எத்தனை தடவைகள் அவசியமோ அத்தனை தடவைகள் குறித்துரைக்கப்பட்ட பயிர் விளைச்சல்களைக் கொண்ட தான காப்புறுதி நிதியத்தின் ஏதேனும் பகுதியை விற்கலாம் என்பதுடன், அவ்விற்பனையாலான வரும்படியை, விற்பனையில் ஏற்பட்ட செலவுகளை அதிலிருந்து கழித்தபின், அத்தகைய நிதி யத்தில் வரவு வைத்தலும் வேண்டும்.

**38.** (1) சபை அல்லது சபையினால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் எவரும், ஏதேனும் குறித்துரைக்கப் பட்ட பயிர் அல்லது ஏதேனும் காப்புறுதி செய்யப்பட்ட பண்ணை விலங்கு உள்ளதான ஏதேனும் காணியுட் சென்று அக்காணியை யும் அது தொடர்புபட்ட எவையேனும் ஆவணங்களையும் பார்வை யிடலாம் என்பதுடன், அவ்வாறு பார்வையிட அனுமதித்தலும் அதற்கு உதவி செய்தலும் அத்தகைய காணியில் குடியிருப்போர் ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவ றுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விசாரணையின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றைச் செலுத்துதற்கும் ஆளாதல் வேண்டும்.

**39.** சபை அல்லது சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் எவரும், பயிர் அல்லது பண்ணை விலங்கு தொடர்பில், அத்தகைய பயிருக்கு அல்லது பண்ணை விலங்குக்கு நேரும் சேதத்தைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அவசிய மாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு அச்சட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவரை அல்லது காப்புறுதிப் பத்திரமொன்று உடையவரைப் பணிக்கலாம்.

**40.** (1) 1961 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பயிர்க் காப்புறுதிச் சட்டம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

(2) 1961 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பயிர்க் காப்புறுதிச் சட்டம் நீக்கப்பட்டமை எப்படியிருப்பினும், அச்சட்டத்தின் ஏற் பாடுகளின் கீழ், காப்புறுதி செய்துகொண்ட ஆட்களினால் செலுத்தப்ப டற்குரிய கட்டுப்பணக் கொடுப்பனவுகளாகத் தீர்க்கப்படாதிருப்பனவும்

செலுத்தப்படற்பாலனவுமான எல்லா வருமதிகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று, சபைக்குச் செலுத்தப்படற்பாலனவாகக் கருதப்படல் வேண்டும்.

**41**. இச்சட்டத்தில்,—

''அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையம்'' என்பது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் முகவர் நிலையமெனச் சபையினுல் அப்போதைக்கு வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் அல்லது வேறு நிறுவகம் என்று பொருளாகும்; அத்துடன்

''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது, அதன் மூலதனம் முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தினுல் கொடை, கடன் அல்லது வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டதும், கம்பனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுமான அல்லது தாபிக்கப்படுவதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்.

# 1973ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க
# கடன் சபை (திருத்தச்) சட்டம்

**கடன் சபைக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*1973 ஒகத்து மாதம் 17 ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

1. இச்சட்டமானது, 1973ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, கடன் சபை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்திதன்மேல் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் கடன்சபைக் கட்டளைச்சட்டத்தின் 14ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

> 14. [1] கடன்சபையினுற் பெறப்பட்டதும் செலுத்தப்பட்டதும் செலவு செய்யப்பட்டதுமான, அல்லது கடன் சபைக்கு வருமதியான எல்லாப் பணத்தொகைகளினதும், பணத்தொகைகள், செலவு செய்யப்பட்ட பொருள்கள், கருமங்கள், விடயங்கள் என்பவற்றினதும் ஒவ்வொரு நிதி யாண்டு தொடர்பிலான உண்மையானதும் ஒழுங் கானதுமான கணக்குகள் பதியப்படவேண்டிய புத்தகமொன்று அல்லது புத்தகங்கள், கட்டளைச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் அதன்சார்பிற் செய்யப்பட்ட விதிகள் மூலமும் ஒழுங்குவிதிகள் மூலமும் விதிக்கப்படக்கூடியவாருன அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டுமெனக் கடன்சபை ஆணையாளர்கள் காலத்திற்குக் காலம் கட்டளையிட்டுப் பணித்தல் வேண்டும்.
>
> [2] கடன்சபையினது நிதியாண்டானது ஒவ் வோர் ஆண்டினதும் சனவரி முதலாம் நாளன்று தொடங்கும் பன்னிரண்டு மாத காலமாதல் வேண்டும்.''

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படு கின்றது :—

15. பதினைன்காம் பிரிவின் கீழ் அல்லது வேறு வகையில் வைத்திருக்கப்படும் கடன்சபைக் கணக்குகளெல்லாம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்விற்கு அமைந்தனவாதல் வேண்டும். கணக்காய்வாளர் எல்லாக் காலங்களிலும் தாமாக அல்லது எழுத்தில் அவரினல் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் மூலமாகக் கணக்குப் புத்தகங்கள், ஆவணங்கள் எல்லாவற்றையும் பரிசோதிப்பதற்கும், அத்தகைய கணக்குகளைச் சரிபார்ப்பதற்கு அவசியமான எல்லா ஈட்டு முறிகளையும் ஒப்பந்தங்களையும் உறுதிச்சீட்டுக்களையும் அத்துடன் எவ்வகையினதாயினுமான ஆவணங்களையும் காண்பிக்கும்படி பணிப்பதற்கும் தத்துவமுடையராவர்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

18. ஆணையாளர்கள், இலங்கைக் குடியரசின் அரசாங்கத்திற்கு, பன்னிரண்டாம் பிரிவின் கீழ்ச் செய்யப்படும் முதலீடுகளிலிருந்து ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் கடன்சபைக்கு வருமதியான முழுமொத்த வட்டியிலிருந்து, சபையின் அலுவல்களை முகாமை செய்வது சம்பந்தமாக அந்த அரசாங்கத்தினல் உறப்பட்ட அல்லது செய்யப்பட்ட முழுமொத்தச் செலவினங்களுக்குச் சமமானதென அல்லது ஆகக்கிட்டிய அண்ணளவானதென, அமைச்சரினலும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினலும் அப்போதைக்கு அங்கீகரிக்கப்பட்ட தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றை அத்தகைய ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் செலுத்துதல் வேண்டும்.''.

## 1973ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க
## செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்**

*1973 ஒற்ரோபர் மாதம் 1 ஆம் திகதி சான்றிடப்பட்டுள்ளது.*

1. இச்சட்டமானது, 1973ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்திதன்மேல் "முதன்மைச்சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) வங்கியின் அனுமதியுடனன்றி —

(அ) அதிகாரம்பெற்ற வணிகரல்லாத ஆள் எவரும் இலங்கையில், அதிகாரம்பெற்ற வணிகரல்லாத வேறெவரேனும் ஆளிடமிருந்து தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் எதையும் வாங்கவோ, கடனுகப் பெறவோ, ஏற்றுக்கொள்ளவோ அல்லது அவருக்குத் தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் எதையும் விற்கவோ அல்லது கடனுகக் கொடுக்கவோ அல்லது அவருடன் வெளிநாட்டு நாணயம் எதையும் இலங்கையிற் கொடுத்து மாற்றவோ ஆகாது, அத்துடன்

(ஆ) அதிகாரம்பெற்ற வணிகரல்லாத இலங்கையில் வதியும் ஆள் எவரும், இலங்கைக்கு வெளியில், அதிகாரம் பெற்ற வணிகரல்லாத வேறெவரேனும் ஆளிடமிருந்து தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் எதையும் வாங்கவோ, கடனுகப் பெறவோ அல்லது அவருக்குத் தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் எதையும் விற்கவோ, கடனுகக் கொடுக்கவோ ஆகாது :

ஆயின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை, அஞ்சற் கட்டளைகள் அல்லது காசுக்கட்டளைகள் உருவில் இலங்கையிலுள்ள

அஞ்சலகம் எதிலும். அதன் தொடர்பில் வங்கியினுற் கொடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, விற்பனை செய்தலையும் கொள்வனவு செய்தலையும் தடை செய்வனவாகா ''.

3. முதன்மைச்சட்டத்தின் 7ஆம் பிரிவானது இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படு கின்றது :—

7. வங்கியின் அனுமதியுடனன்றி, ஆள் எவரும் —

(அ) இலங்கைக்கு வெளியில் வதியும் ஆள் ஒரு வருக்கு அல்லது அவரின்பேரில் வரவு வைப் பதற்காகக் கொடுப்பனவு எதையும் இலங்கை யிற் செய்தலாகாது, அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியில் வதியும் ஆள் ஒரு வரின் கட்டளைமூலம் அல்லது அவரது சார் பில் இலங்கையில் வதியும் ஆள் ஒருவருக்கு அல்லது அவரின்பேரில் வரவு வைப்பதற் காகக் கொடுப்பனவு எதையும் இலங்கையிற் செய்தலாகாது, அல்லது

(இ) இலங்கைக்கு வெளியில் வதியும் எவரேனும் ஆளின் வரவிற் பணத்தொகை எதையும் இலங்கையில் இடுதலாகாது அல்லது வைத் திருத்தலாகாது :

ஆயின், இப்பிரிவின் (இ) என்னும் பந்தி, இலங் கைக்கு வெளியில் வதியும் ஆளொருவர், அவரிடமிருந்து செல்மதியான கடனென்றைத் தீர்ப்பதில் அல்லது அதைத் தீர்க்குமுகமாகப் பணத்தொகை ஒன்றைக் கொடுத்திருக்குமிடத்து, அக்கொடுப்பனவை ஒப்புக்கொள் வதை அல்லது பதிவுசெய்வதைத் தடைசெய்வதாகாது.''.

4. முதன்மைச்சட்டத்தின் 22ஆம் பிரிவானது இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் ;—

'(3) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அக்கட்டளையில் குறிப்பிடப்படும் சேரிடம் எதற்கும் வங்கியின் அனுமதியுடனன்றிப் பண்டங்கள் எவையும் ஏற்றுமதிசெய்யப்படலாகாதென ஏற்பாடு செய்யலாம்.

(4) விற்பனை நோக்கங்களுக்காகப் பண்டங்களை ஏற்றுமதி செய்தல் தொடர்பில் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதி வழங்கும்போது —

(அ) சேரிடத்திற்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட அவ்வகுப்பினவான அல்லது விவரணத்தினவான பண்டங்கள் தொடர்பில் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிகளிலும் முறையிலும் அப்பண்டங்களுக்கான கொடுப்பனவு இலங்கையில் வதியும் ஓர் ஆளுக்குச் செய்யப்பட்டிருப்பதாகவும், அல்லது ஏற்றுமதிசெய்யப்பட்ட தேதியின்பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட இருப்பதாகவும்; அத்துடன்

(ஆ) செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்பட இருப்பதான கொடுப்பனவின் தொகை, எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு பார்க்கையில் தேசிய நலனுக்கு உகந்ததான அத்தகைய பண்டங்களுக்கான பிரதிவரவாக இருப்பதாகவும்.

வங்கி தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல்வேண்டும்.

ஆயின், பணிப்பு ஏற்புடையதாகவிருக்கும் விடயங்களில், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தி, அதிலிருக்கும் ஆறு மாதங்கள் என்னும் குறிப்பீட்டிற்குப் பதிலாகப் பணிப்பில் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய நீண்ட அல்லது குறைந்த காலக் குறிப்பு இடப்பட்டிருந்தாற்போன்று, அல்லது ''அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட தேதியின் பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட இருப்பதாகவும்'' என்னுஞ் சொற்கள் விட்டுவிடப்பட்டிருந்தாற்போன்று பயனுடையதாதல் வேண்டுமென வங்கி பணிக்கலாம். ' ; அத்துடன்

(2) அப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

5. முதன்மைச் சட்டத்தின் 29ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்படுத்தப்படுகின்றன ; அவை முதன்மைச் சட்டத்தின் 29அ 29ஆ, 29இ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதல் வேண்டும் :—

29அ. வங்கியினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கவன்றி, ஆள் எவரும், ஏதேனும் உல்லாசப்பிரயாண, விமான,

அல்லது கப்பற் சேவையை நடாத்துதல் அல்லது பேணுதல், அல்லது கப்பற்சேவை முகவர்களாக அல்லது விமானச்சேவை முகவர்களாகத் தொழில் கொண்டு நடாத்துதலாகாது.

29ஆ. இலங்கையிலிருக்கும் அல்லது இலங்கையில் வதியும் ஆள் எவரும், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் வங்கியினுல் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கவன்றி, இலங்கைக்கு வெளியே வதியும் ஓர் ஆளுக்கு விதிக்கப்பட்ட ஏதேனுஞ் சேவையைப் புரிதலாகாது.

29இ. இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எப்படியிருந்தபோதிலும், இலங்கையில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படாத, அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் நேர்முகமாக அல்லது மறைமுகமாகக் கட்டுப்பாடு செய்யப்படும் (வங்கித்தொழிற் கம்பனியல்லாத) ஒரு கம்பனி, அல்லது இலங்கையில் அத்தகைய கம்பனியின் ஏதேனும் கிளை அல்லது அலுவலகம், அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களை முழுக்கமுழுக்க அல்லது பகுதியளவில் கொண்டுள்ள ஒரு குழுமம் —

(அ) வியாபாரத்தில் அல்லது வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் கம்பனியின் அல்லது குழுமத்தின் இலங்கையிலுள்ள முகவராக; அல்லது

(ஆ) எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் கம்பனியின் அல்லது குழுமத்தின் இலங்கையிலுள்ள தொழில் நுட்ப அல்லது முகாமை ஆலோசகராக.

வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியுடனன்றி நியமனம் பெற்றுக்கொள்ளலாகாது; அத்தகைய நியமனம் அத்தகைய அனுமதியுடனன்றி பெற்றுக்கொள்ளப்பட்டவிடத்து வறிதானதாதல் வேண்டும்.''.

6. முதன்மைச் சட்டத்தின் 30ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படு கின்றது :—

30. (1) இதனகத்திதன்மேல் கூறப்படும் அத்தகைய எவையேனும் தேவைப்பாடுகள் ஏதேனும் வெளிநாட்டுக் கம்பனியால் இணங்கியொழுகப்பட வேண்டுமென வங்கி விரும்புகிறதெனவும், இலங்கையில் வதியும் எவரேனும் ஆள் ஏதேனுஞ் செயலைச் செய்வதன்மூலம் அல்லது செய்வதிலிருந்து தவிர்வதன்மூலம்

(அ) தேவைப்பாடுகளுள் எதனுடனும் வெளிநாட்டுக்கம்பனியை இணங்கியொழுகச் செய்விக்கலாமெனவும் ; அல்லது

(ஆ) தேவைப்பாடுகளுள் எதனுடனும் வெளிநாட்டுக் கம்பனி இணங்கியொழுகுதலிலுள்ள ஏதேனுந் தடையை நீக்கலாமெனவும்; அல்லது

(இ) தேவைப்பாடுகளுள் எதனுடனும் வெளிநாட்டுக்கம்பனி இணங்கியொழுகுவதை எம்முறையிலேனும் அநேகமாக நிகழக் கூடியதானதாக்கலாமெனவும்,

அவ்வாளுக்கு எழுத்திலான ஓர் அறிவித்தல் சேர்க்கப்பட்டவிடத்து, அப்பொழுது, வங்கியினல் முரணின உத்தரவு கொடுக்கப்படக்கூடியவரை தவிர, அவ்வாள், விடயத்திற்கேற்ப அச்செயலைச் செய்தல்வேண்டும் அல்லது செய்வதிலிருந்து தவிர் தல்வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஓர் அறிவித்தல் எத்தேவைப்பாடுகள் தொடர்பில் கொடுபடக்கூடியதோ, அத்தேவைப்பாடுகள் பின்வருவனவாகும்; அவையாவன, வெளிநாட்டுக் கம்பனி —

(அ) அவ்வறிவித்தலில் கூறப்பட்ட அத்தகைய கம்பனியின் சொத்துக்களும் வியாபாரமும் தொடர்பிலான அத்தகைய விவரங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஆ) கம்பனி விற்பதற்கு உரித்துள்ளதான, அல்லது அது விற்பனையைச் செய்வித்துக்

கொடுப்பதற்கு உரித்துள்ளதான வெளிநாட்டுச் செலாவணியாயிருக்கும், அறிவித்தலில் கூறப்பட்ட ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை அதிகாரம்பெற்ற வணிகரொருவருக்கு விற்கவேண்டும் அல்லது அதன் விற்பனையைச் செய்வித்துக்கொடுக்க வேண்டும் ;

(இ) அவ்வறிவித்தலில் கூறப்படக்கூடிய அத்தகைய பங்கிலாபங்களை வெளிப்படுத்திக் கொடுத்தல் வேண்டும் ;

(ஈ) அவ்வறிவித்தலில் கூறப்பட்ட அதனது சொத்துக்களுள் எதனையும் கூறப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் விற்றுப் பணமாக்க வேண்டும் ;

(உ) அவ்வறிவித்தலில் கூறப்படக்கூடிய அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது எவையேனும் பிணைப்பொறுப்புகளை விற்பதிலிருந்து அல்லது மாற்றுவதிலிருந்து, அல்லது அவை தொடர்பிலான கம்பனியின் உரிமைகளை அல்லது தத்துவங்களைப் பாதிக்கும் எதையும் செய்வதிலிருந்து தவிர்தல் வேண்டும்.

(3) இலங்கையில் வதியும் ஆட்களினால் கட்டுப்பாடு செய்யப்படும் ஏதேனும் தொழில் எச்செயலினால் அவ்வாறு கட்டுப்பாடு செய்யப்படாதொழிகின்றதோ, அச்செயல் எதையும் இலங்கையில் வதியும் ஆள் எவரும் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியுடனன்றிச் செய்தலாகாது.

(4) வேறு ஏதேனும் சட்டத்தில் இருப்பது எதுவும் எப்படியிருப்பினும், இலங்கைக்கு வெளியில் வதியும் ஆள் ஒருவரினால் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆள் எவருக்கும் செய்யப்படும் ஏதேனும் தொழிலிலான எதேனும் அக்கறையின் மாற்றம் எதுவும் மாற்றஞ் செய்வோனால் அல்லது மாற்றம் பெறுவோனால் உறுதிப்படுத்துகைக்காக

வங்கிக்கு ஒரு விண்ணப்பஞ் செய்யப்பட்டதன்மேல் அத்தகைய மாற்றம் வங்கியினல் உறுதிப்படுத்தப் பட்டாலன்றி, செல்லுபடியாகாது. இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஒரு கம்பனியிலுள்ள எவையேனும் பங்குகளின் மாற்றத்திற்கு ஏற்புடையனவாகா.

(5) இலங்கையில் வதியும் ஆள் எவரும், வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியுடனன்றி, ஒரு வெளிநாட்டரசின் குடிமகனுக்கு அல்லது அவன்சார்பில், இலங்கையிலுள்ள ஏதேனும் தொழிலில் ஏதேனும் அக்கறையை மாற்றவோ அல்லது அத்தகைய தொழிலில் ஏதேனும் அக்கறையை உண்டுபண்ணவோ ஆகாது.

(6) இலங்கையில் வதியும் ஆள் எவரும். வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியுடனன்றி, இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளினது ஏதேனும் கடன் அல்லது வேறு ஏதேனும் கடப்பாடு அல்லது பொறுப்புத் தொடர்பில் ஓர் உத்தரவாதத்தைக் கொடுத்தலாகாது.

(7) இலங்கையில் வதியும் ஆள் எவரும், வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியுடனன்றி, இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களினல் நேர்முகமாக அல்லது மறைமுகமாகக் கட்டுப்பாடு செய்யப்படும் (வங்கித்தொழிற் சம்பனியல்லாத) ஏதேனுங் குழுமத்திற்கு அல்லது கம்பனிக்கு ஏதேனும் பணம் கடன் கொடுத்தலாகாது.

(8) இப்பிரிவில் "வெளிநாட்டுக் கம்பனி" என்பது இலங்கையில் வலுவிலிருக்கும் ஏதேனுஞ் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படாததும், அது தொடர்பில் பின்வரும் நிபந்தனைகளுள் எதுவும் நிறைவேற்றப்பட்டுள்ளதுமான ஒரு கம்பனி என்று பொருளாகும் :—

(அ) அக்கம்பனி, இலங்கையில் வதியும் எவரேனும் ஆளினல் அல்லது ஆட்களினல் எப்படியாயினும் (நேர்முகமாக அல்லது மறைமுகமாக) கட்டுப்பாடு செய்யப்படுவதாயிருத்தல்; அல்லது

(ஆ) கம்பனி ஒழித்துக்கட்டப்பட்டதன்மேல் பங்கு மூலதன அல்லது கடன் மூலதன உடைமையாளரால் பெறப்படக்கூடிய தொகைகளில் அரைவாசிக்கு மேலானவை, இலங்கையில் வதியும் ஆட்களினுல் அல்லது அவர்களின் பயனுக்காக நேர்முகமாக அல்லது மறைமுகமாகப் பெறப்படக்கூடியனவாயிருத்தல்; அல்லது

(இ) கம்பனி ஒழித்துக்கட்டப்பட்டதன்மேல், கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர், பங்கிடுவதற்கெனக் கிடைக்கக்கூடிய சொத்துக்களில் அரைவாசிக்கு மேலானவை, இலங்கையில் வதியும் எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் அல்லது அவர்களின் பயனுக்காக நேர்முகமாக அல்லது மறைமுகமாகப் பெறப்படக்கூடியனவாயிருத்தல்; அல்லது

(ஈ) பின்வருவனவற்றுள் அரைவாசிக்கு மேலானவை, இலங்கையில் வதியும் எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் அல்லது அவர்களின் பயனுக்காகப் பெறப்படக்கூடியனவாயிருத்தல் :—

(i) கம்பனியினது கடன்களும் கடன் மூலதனமும், எவையும் இருப்பின், அவற்றின்மேல் கொடுபடவேண்டிய வட்டி, அல்லது

(ii) கம்பனியினது முன்னுரிமைப் பங்குமூலதனம், எதுவும் இருப்பின், அதன் மேல் கொடுபடவேண்டிய பங்கிலாபங்கள், அல்லது

(iii) முன்னுரிமைப் பங்குமூலதனமாகவல்லாத பங்கு மூலதனம், எதுவும் இருப்பின். அதன்மேல் கொடுபடவேண்டிய பங்கிலாபங்கள்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, எவ்வாளினுல் அல்லது ஆட்களினுல் அல்லது எவ்வாளின் அல்லது ஆட்களின் பயனுக்காக ஏதேனும் பணத்

தொகை, எவையேனும் சொத்துக்கள், ஏதேனும் வட்டி அல்லது எவையேனும் பங்கிலாபங்கள் நேர் முகமாக அல்லது மறைமுகமாகப் பெறப்படக் கூடியனவோ அவ்வாளின் அல்லது ஆட்களின் அடையாளம், இலங்கையில் வதியும் ஆள் எவரினு லும் அதற்கென அவருக்கு உரித்தாக்கப்பட்ட ஒரு தத்துவத்தைப் பிரயோகிப்பதில் தங்கியிருக்கு மிடத்து, அப்பணத்தொகை, சொத்துக்கள், வட்டி அல்லது பங்கிலாபங்கள் இலங்கையில் வதியும் எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் அல் லது அவ்வாளின் அல்லது ஆட்களின் பயனுக்காக நேர்முகமாக அல்லது மறைமுகமாகப் பெறப்படக் கூடியவையெனக் கருதப்படுதல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டத்தின் 31ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

''(3) இலங்கைக்கு வெளியில் வதியும் ஆள் எவரின தும் வரவிற் கொடுப்பனவு ஒன்றைச் செய்வதற்காக அல் லது ஏதேனும் பணத்தொகையை இடுவதற்காக எவ ரேனும் ஆள் வங்கியின் அனுமதிக்காக விண்ணப்பஞ் செய்யுமிடத்து, வங்கியானது, கொடுபடவேண்டிய அல் லது வரவு வைக்கப்பட வேண்டிய பணத்தொகை ஒரு முடக்கப்பட்ட கணக்கில் மாத்திரம் கொடுபட அல்லது வரவு வைக்கப்பட வேண்டுமெனப் பணிக்கலாம். வங்கி யினுல் அத்தகைய பணிப்பு கொடுபடுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பணத்தொகையை முடக்கப்பட்ட கணக் கொன்றுக்குக் கொடுத்தல் வேண்டும் அல்லது அதில் வரவு வைத்தல் வேண்டும்.'';

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

'(2) முடக்கப்பட்ட கணக்கொன்றிற்கு மட்டுமே கொடுப்பனவொன்று செய்யப்படவேண்டுமென வங்கி பணிக்குமிடத்து, —

(அ) அக்கொடுப்பனவு செய்யப்படக்கூடிய முறையானது ஒன்றில் —

(i) எவ்வாளின் வரவிற்குக் கொடுப்பனவு செய் யப்படுகின்றதோ அவ்வாளின் முடக்கப்பட்ட

கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்ற பணிப்பொன்றுடன் அப்பணிப்பு, காசோலை அல்லது காசாணை மூலம் செய்யப்படும் கொடுப்பனவொன்றின் விடயத்தில், அக்காசோலையில் அல்லது காசாணையில் ''...............................
என்பவரின் (அவ்வாளின் பெயரைக் குறிப்பிட்டு) முடக்கப்பட்ட கணக்குக்கு'' அல்லது அதே பயனைத் தரும் சொற்களை எழுதி வங்கித் தொழிலருக்குச் செய்யப்படுவதாக, அல்லது

(ii) ''பணம்பெறுபவரின் முடக்கப்பட்ட கணக்கொன்றிற்கு மட்டுமே கொடுபடற்பாலது'' என்னுஞ் சொற்களை அல்லது அதேபயனைத் தரும் சொற்களை எழுதி அவ்வாள் பேரில் எழுதப்பட்ட குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை அல்லது காசாணை மூலமாகச் செய்யப்படுவதாக.

இருத்தல் வேண்டும், அத்துடன்

(ஆ) சேகரிக்கப்பட்ட அப்பணம் வங்கித்தொழிலரினால் அவ்வாளின் முடக்கப்பட்ட கணக்கொன்றில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.';

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் : அத்துடன்

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை விட்டுவிடுவதன் மூலமும்.

8. முதன்மைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

''(1) வங்கியானது, அச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, இலங்கையிலிருக்கும் அல்லது வதியும் ஆள் எவருக்கும், அவரை —

(அ) வங்கிக்கு, அல்லது அதைத் தேவைப்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளென அத்தகைய பணிப்புக்களில் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும்

ஆளுக்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதலைப் பெறும் அல்லது அவற்றிற் கிணங்கியொழுகாது தட்டிக்கழித்தலைக் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காக, வங்கிக்கு அல்லது விடயத்திற்கேற்ப அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குத் தேவைப்படக்கூடியதான தம் வசமிருக்கும் ஏதேனும் தகவலை அத்தகைய பணிப்புக்களிற் குறிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாகவும் அத்தகைய முறையிலும் கொடுத்துதவும்படி, அல்லது அத்தகைய ஆள் தம்வசம் அத்தகைய தகவலை வைத்திராவிடத்து, அத்தகைய பணிப்புக்களிற் குறிப்பிடப்படக்கூடிய இலங்கையில் அல்லது வெளியில் இருக்கும் அத்தகைய ஆள் எவரிடமிருந்தும் அத்தகைய தகவலைப் பெற்று வங்கிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி; அல்லது

(ஆ) அத்தகைய பணிப்புக்களிற் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய கருமம் அல்லது கருமங்கள் எவை மேலும் அவர் விசாரணை செய்யப்படுவதற்காக, அத்தகைய பணிப்புக்களிற் குறிப்பிடப்பட்ட எவரேனும் அலுவலரின் முன்னிலையில், அவற்றின்கண் குறிக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் நேரில் சமூகமளிக்கும்படி,

தேவைப்படுத்திப் பணிப்புக்கள் கொடுக்கலாம்.'' ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

''(1அ) உட்பிரிவு (1) (ஆ) வின் கீழ் விசாரணை செய்யப்படும் எவரேனும் ஆள், அவரை விசாரணை செய்யும் அலுவலரால் கேட்கப்பட்ட எல்லா வினாக்களுக்கும் உண்மையாக விடையளித்தல் வேண்டும்'' ; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

'(5) இப்பிரிவில் ''வங்கி'' என்பது, இப்பிரிவினால் வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கென பணச்சபையினால் பொதுவாக அல்லது சிறப்பாக அதி

காரமளிக்கப்பட்ட உண்ணுட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது சுங்கத்திணைக்களத்தின் எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.'.

9. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாமாண்டின் 14 ஆம் இலக்கத் தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தினுல் முதன்மைச் சட்டத்தில் புகுத்தப்பட்ட 30அ என்னும் பிரிவானது, அதன் (6) ஆம் பந்தியில், 'வாகனம் அல்லது கலன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வாகனம் வானூர்தி, அல்லது கலன்'' என்னும் சொற்களையிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது.

10. முதன்மைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

40. (1) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தலைவர், அல்லது அவரது உதவியாளராகப் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட அத்தகைய அலுவலர் எவரும், அல்லது இப்பிரிவின் நோக்கங்களுக்காகச் செயலாற்றவெனச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தலைவரினுல் அதிகாரமளிக்கப்படக்கூடியவரான, அரச திணைக்களமொன்றன் தலைவரினது உதவியாள் என்ற பதவிக்குக் குறையாத பதவியிலுள்ள அத்தகைய அரச அலுவலர் எவரும் —

(அ) இச்சட்டத்தின்கீழான ஒரு தவறு புரியப்பட்டிருப்பதாகவும் அல்லது புரியப்படுவதாகவும், தவறு புரியப்பட்டமைக்கான சான்று, ஏதேனும் வளவில், அல்லது ஏதேனும் கலத்தில். வாகனத்தில் அல்லது வானூர்தியில் அல்லது எவரேனும் ஆள்வசம் காணப்பட இருப்பதாகவும் சந்தேகப்படுவதற்கு நியாயமான ஆதாரம் இருப்பதாக; அல்லது

(ஆ) 39ஆம் பிரிவின்கீழ் காண்பித்திருக்கப்படவேண்டியனவும், அவ்வாறு காண்பிக்கப்படாதனவுமான எவையேனும் புத்தகங்கள், கணக்குகள், அல்லது வேறு ஆவணங்கள், அத்தகைய வளவுகளில் அல்லது அத்தகைய ஏதேனும் வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது அத்தகைய ஆள்வசப் காணப்பட இருப்பதாக ; அல்லது

(இ) ஏதேனும் வெளிநாட்டு நாணயம், அத்தகைய ஏதேனும் வளவில் அல்லது அத்தகைய ஏதேனும்

வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது அத்தகைய எவரேனும் ஆள்வசம் காணப் பட இருப்பதாக,

திருப்திப்பட்டால் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக் களத்தின் தலைவர் அல்லது அத்தகைய அலுவலர், அத் தகைய வளவுள், அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய வாகனம், கலம் அல்லது வானூர்தி அல்லது ஆள் இருக் கக்கூடிய ஏதேனும் வளவுள் நுழைந்து அத்தகைய வளவை, அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய வாக னத்தை, கலத்தை வானூர்தியை அல்லது ஆளைத் தேடுதலிடலாம்.

(2) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவர், அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய அலு வலர் அவ்வளவுகளில் அல்லது வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது அவ்வாள்வசம் காணப் படுவதும், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு புரிந்த மைக்குச் சான்றாக இருப்பதென நம்புவதற்கு நியாய மான ஆதாரங்கள் அவருக்கு இருப்பதுமான ஏதேனும் பொருளை, அல்லது 39ஆம் பிரிவின்கீழ் காண்பிக்கப்பட் டிருக்கவேண்டியதென நம்புவதற்கு நியாயமான ஆதா ரங்கள் இருப்பதான புத்தகங்களை, கணக்குகளை அல்லது ஆவணங்களைக் கைப்பற்றலாம்;

ஆயின், பெண்பாலார் எவரும், இப்பிரிவின் கீழான தேடுதலின்போது, பெண்பாலார் ஒருவரினாலன்றித் தேடு தலிடப்படுதலாகாது.

(3) ஆளொருவர், இப்பிரிவின் பயனாக ஏதேனும் வளவுள் நுழைவதற்குத் தத்துவமுடையராயிருக்கு மிடத்து, அவர், அத்தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக நியாயமாகத் தேவைப்படும் அத்த கைய வலோற்காரத்தைப் பிரயோகிக்கலாம்.

இந்தப் பிரிவின் பயனைக் கொண்டு ஆளொருவ ரைத் தேடுவதற்கு ஓர் அலுவலருக்குத் தத்துவமிருக்கு மிடத்து, அத்தகைய அலுவலர் அத்தகைய ஆளை விசா ரணை செய்யலாம் ; அத்தகைய ஆள், அவரை விசாரணை செய்யும் அலுவலரால் கேட்கப்படும் எல்லாக் கேள்வி களுக்கும் உண்மையாக விடையளித்தல் வேண்டும்.

(4) ஆள் எவரும், வேறு ஆள் எவரையும், இப்பிரி வின் முற்போந்த ஏற்பாடுகளின் பயனாக அந்த வேறு

ஆளுக்கு அளிக்கப்பட்ட ஏதேனுந் தத்துவத்தைப் பிர யோகிப்பதில், தடுத்தலாகாது.

(5) இப்பிரிவின்கீழ் செயல் எதையுஞ் செய்வதற் குத் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவ்வாறு செய்வது தகுந்ததென அவர் நினைத்தால், அத்தகைய செயலைச் செய்வதற்காக ஒரு சமாதான அலுவலரின் உதவியைப் பெறலாம்.''.

**11.** முதன்மைச் சட்டத்தின் 49அ என்னும் பிரிவை உடனடுத் துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; அது முதன்மைச்சட்டத்தின் 49ஆ என்னும் பிரிவாகப் பயனுடைய தாதல்வேண்டும் :

49ஆ. இச்சட்டத்தின் கீழுள்ள ஏதேனுந் தவறு தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் எதிலும், எவ ரேனும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராகப் பின்வரும் ஆவணங்களுள் எதுவும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட் டுச் சான்றிற் கொடுபடலாமென்பதோடு, அது அவற் றின் கண்ணுள்ள கருமங்களின், கொடுக்கல் வாங்கல் களின் அல்லது கணக்குகளின் முதற்றோற்றச் சான்று தலும் வேண்டும் :—

(அ) வங்கியின் முகாமையாளரிடமிருந்து அல்லது பிர தான கணக்காளரிடமிருந்து பெறப்படும் வங்கித் தொழிலர் புத்தகத்தின் அல்லது அதனது கூறு எத னதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;

(ஆ) கம்பனியொன்றினாற் பேணப்பட வேண்டுமெனச் சட்டத்தின்மூலம் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் புத்தகத்தின் அல்லது வேறு பதிவேட்டின் அத் தாட்சிப்படுத்திய பிரதியேயாய் அல்லது அப்புத்த கத்தினது அல்லது பதிவேட்டினது கூறு எதனதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதியேயாய் அக் கம்பனிப் பணிப்பாளர். அல்லது செயலாளர் ஒரு வரிடமிருந்து பெறப்பட்ட ஒரு பிரதி; அத்துடன்

(இ) ஒரு வெளிநாட்டரசாங்கத்தின் அலுவலரொருவரின் முறையான கட்டுக்காப்பில் உள்ளதும் அத்தகைய அலுவலரிடமிருந்து பெறப்படுவதுமான ஏதேனும் ஆவணத்தின் அல்லது அதனது கூறு ஒன்றின் அத் தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி.''.

12. முதன்மைச்சட்டத்தின் 50அ என்னும் பிரிவானது, அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 30 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் பணச் சபையினுல் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப் பாட்டுத் திணைக்கள அலுவலர் ஒருவரெனக் கருதப் படுதல் வேண்டும்.''.

13. முதன்மைச்சட்டத்தின் 51ஆம் பிரிவானது, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது ;—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

''(1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்கு விதியை மீறும், அல்லது இச்சட்டத்தின்கீழ் கொடுக்கப் படும் ஏதேனும் பணிப்புடன் அல்லது அதன்கீழ் விதிக்கப் படும் நிபந்தனையுடன் அல்லது தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறும் இலங்கையிலிருக்கும் அல்லது வதியும் எவரேனும் ஆள், ஒரு தவறுக்கு, அத்தவறு இச்சட்டத்தின் (IV) ஆம் பாகத்தின் பயனுகச் சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழும் தண்டிக்கற்பால தாகவிருப்பினும், குற்றவாளியாதல் வேண்டும்.''.

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

''(4) இச்சட்டத்தின் கீழ் ஒரு தவறைப் புரியும் எவ ரேனும் ஆள் —

(அ) ஒரு நீதிவான் முன்னிலையிலான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் பதினெட்டு மாதங்க ளுக்கு மேற்படாத காலத்திற்கு இருவகை யிலொருவகையான சிறைத்தண்டனைக்கு, அல்லது அத்தகைய சிறைத்தண்டனைக்கும் ஒரு குற்றப்பணத்துக்கும் ஆளாதல்வேண் டும் ; அல்லது

(ஆ) ஒரு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு இருவகையிலொருவகையான சிறைத் தண்டனைக்கு, அல்லது அத்தகைய சிறைத் தண்டனைக்கும் ஒரு குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும் ; அத்துடன் அத்தவறுனது, தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு பண்டங்கள் அல்லது வேறு ஆதனம் எதனுடனும் சம்பந்தப்பட்டதாயிருக்குமிடத்து நீதிமன்றம், அவ்வாறு செய்வது தகுந்ததென அது நினைத்தால், அந்தத் தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு, பண்டங்கள் அல்லது ஆதனம் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்; அத்துடன் இவ்வுட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்படும் ஏதேனும் தங்கம், நாணயம், பிணைப் பொறுப்பு, பண்டங்கள் அல்லது ஆதனம், அமைச்சர் பணிக்கக்கூடிய அத்தகைய முறையில் கையாளப்படுதல் வேண்டும் அல்லது உரிமைமாற்றப்படுதல் வேண்டும்.'’; அத்துடன்

(3) அதன் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

''(7) இச்சட்டத்தின் கீழுள்ள ஏதேனும் தவறு தொடர்பிலான குற்றவழக்குத் தொடுப்பெதுவும் வங்கியின் வேண்டுகோளின்படியன்றி அல்லது அதன் உத்தரவுடனன்றித் தொடங்கப்படுதலாகாது;

எவ்வாறாயினும், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவரது செயற்பாட்டால் ஆரம்பிக்கப்பட்ட குற்றவழக்கு எதற்கும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.

(8) இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளைப் பிரயோகித்தலுக்கான நோக்கங்களுக்காக அச்சட்டக்கோவையின் முதலாம் அட்டவணையிலுள்ளது எவ்வாறாகவிருந்த போதும், பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடிய தவறுகளாதல் வேண்டும்.

(9) வேறு ஏதேனுஞ் சட்டத்திலுள்ளது எவ்வாறுகவிருந்தபோதும், இலங்கைக்கு வெளியில் புரியப்பட்ட இச்சட்டத்தின் கீழான ஏதேனுந் தவறு, கொழும்புப் பிரிவில் நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிவான் முன்னிலையில் அல்லது கொழும்பிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் விளங்கப்படலாம்.''.

14. முதன்மைச்சட்டத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

52. (1) இச்சட்டத்தின்கீழான குற்றவழக்கை ஆரம்பிப்பதற்கு முன்னர், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார் என வங்கி அபிப்பிராயப்படும் எவரேனும் ஆளை, அத்தேவைப்பாடு அறிவிக்கப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்படும் அத்தகைய காலத்துள் ஈராயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகையைக் குற்றவிறுப்பாகச் செலுத்தும்படி அது எழுத்தில் பணிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுனது, ஏதேனும் தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு, கொடுப்பனவு, பண்டங்கள், அல்லது வேறு ஆதனம் தொடர்பிலானதாகவும், 39 ஆம் பிரிவின் கீழ் அவ்வாறு பணிக்கப்படும் பொழுது அவை தொடர்பில் தகவலைக் கொடுப்பதிலான அல்லது புத்தகங்கள், கணக்குகள் அல்லது வேறு ஆவணங்களைக் காண்பிப்பதிலான தவறுதல் மட்டுமல்லாததாகவும் இருக்குமிடத்து—

(அ) வங்கி, அத்தகைய ஆளை, தங்கத்தின், நாணயத்தின், பிணைப்பொறுப்பின், கொடுப்பனவின், பண்டங்களின் அல்லது ஆதனத்தின் தொகையின் அல்லது பெறுமதியின் மூன்று மடங்குகளுக்கு மேற்படாத ஒரு மேலதிகப் பணத்தொகையைக் குற்றவிறுப்பாக அத்தகைய தேவைப்பாடு அறிவிக்கப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்படக்கூடியவாறுன அத்தகைய காலத்திற்குள் கொடுக்குமாறு எழுத்திற் பணிக்கலாம்; அத்துடன்

(ஆ) வங்கி, அவ்வாறு செய்வது தகுந்ததென நினைத்தால், அந்தத் தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு பண்டங்கள் அல்லது ஆதனம் வங்கியிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென எழுத்திற் பணிக்கலாம்.

*(3)* வங்கியினல் 2 *(அ)* என்னும் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட, வங்கியிடம் ஒப்படைக்கும்படியான தேவைப்பாடு ஒவ்வொன்றும், ஒப்படைக்கப்படவேண்டு மெனப் பணிக்கப்பட்ட அந்தத் தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு, பண்டங்கள் அல்லது ஆதனம் எவ் வாளின் உடைமையில் இருக்கின்றதோ, அவ்வாளுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய அறிவிப்பைப் பெற்றதும் அத்தகைய தங் கத்தை, நாணயத்தை, பிணைப்பொறுப்பை, பண்டங்களை அல்லது ஆதனத்தை வங்கியிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.

*(4)* இப்பிரிவின் கீழ் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட ஏதேனும் தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு, பண்டங் கள் அல்லது ஆதனம், அமைச்சர் பணிக்கக்கூடிய அத் தகைய முறையில் கையாளப்பட அல்லது முடிவுசெய்யப் படவேண்டும்.

*(5)* இப்பிரிவின் கீழ் குற்றவிறுப்பாக விதிக்கப்படும் ஏதேனும் பணத்தொகை பின்வரும் முறையில் முடிவு செய்யப்படுதல் வேண்டும்:

*(அ)* அப்பணத்தொகையின் ஒரு பாதி திரட்டு நிதியத்தின் வரவில் வைக்கப்படுவதற்கென திறைச்சேரிச் செய லாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* அத்தகைய பணத்தொகையின் மற்றையபாதி வங்கி கியின் அபிப்பிராயத்தில் *(1)* ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறைக் கண்டுபிடிப்ப தற்கு ஏதுவானதான அத்தகைய தகவலை அளித்த ஆளுக்கு அல்லது ஆட்களுக்கிடையே பங்கிடப்பட லாம் அல்லது திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப் படலாம்.

*(6)* வங்கியினல் இப்பிரிவின் கீழ் எவ்வாளுக்கெதி ராகப் பணிப்பு ஒன்று இடப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும். வங்கியின் அனுமதியுடனன்றி, அத்தகைய தேவைப்பாடு இணங்கியொழுகப்படும்வரை அல்லது அத் தகைய தேவைப்பாட்டு அறிவிப்பில் குறிக்கப்பட்ட கால முடிவிலிருந்து இரண்டு மாத காலம் முடிவடையும்வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, அவருக்குச் சொந்த மான ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அல்லது பிணைப் பொறுக்களை விற்றல், அடைமானம் வைத்தல், பரா தீனப்படுத்தல், மாற்றல் அல்லது வேறு எவ்வகையிலும் கையாளுதல் ஆகாது;

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய ஆள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறிய தன்மேல், அத்தகைய ஆளுக்கெதிராக அவரினுல் புரியப்பட்ட தவறு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு, முன் சொல்லப்பட்ட இரண்டுமாத காலம் முடிவடையுமுன் தொடுக்கப்பட்டவிடத்து, நீதிமன்றம், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனக் கையாள்கைத் தடையானது, நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குத் தொடர்ந்திருத்தல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(7) எவ்வாளுக்கெதிராக இப்பிரிவின்கீழ் வங்கியினுல் பணிப்பு இடப்பட்டதோ அவ்வாள் எவரேனும். அவருக்கு அப்பணிப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் இருபத்தொரு நாட்களுக்குள் அக்கட்டளைக்கெதிராக அமைச்சருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீட்டில் பணிப்புக்கெதிரான ஆட்சேபனையின் காரணங்கள் கூறப்படுதல் வேண்டும்.

(8) அமைச்சர், (7) ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டதன்மேல், விதிக்கப்பட்ட குற்றவிறுப்பை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், கூட்டலாம் அல்லது வறிதாக்கலாம், அல்லது வங்கிக்கு ஒப்படைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தங்கம், நாணயம், பிணைப்பொறுப்பு, பண்டங்கள் அல்லது ஆதனம் தொடர்பில் தகுந்ததென அவர் நினைக்கக்கூடிய அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.

(9) எவரேனும் ஆள், இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட குற்றவிறுப்பை வங்கிக்குக் கொடுக்குமிடத்து, அல்லது விடயத்திற்கேற்ப குற்றவிறுப்பைக்கொடுத்து, இப்பிரிவின் கீழ் வங்கிக்கு ஒப்படைக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட தங்கத்தை, நாணயத்தை, பிணைபொறுப்பை, பண்டங்களை அல்லது ஆதனத்தை வங்கியிடம் ஒப்படைக்குமிடத்து, அத்தகைய ஆள், எத்தவறு தொடர்பில் குற்றவிறுப்பு விதிக்கப்பட்டதோ அல்லது தேவைப்பாடு பணிக்கப்பட்டதோ, அத்தவறுக்காகக் குற்றவழக்குத் தொடுப்பொன்றுக்கு ஆளாதலாகாது.''.

**15.** முதன்மைச்சட்டத்தின் 54 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "வங்கி'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

''வங்கித் தொழிலர் புத்தகம்'' என்பது ஏதேனும் பேரேட்டையும், நாளேட்டையும், காசேட்டையும், கணக்குப்புத்தகத்தையும், அத்துடன் வங்கி ஒன்றின் சாதாரணத் தொழிலிற் பயன்படுத்தப்படும் வேறேதேனும் புத்தகத்தையும் உள்ளடக்கும்;

''வங்கித்தொழில் கம்பனி'' என்பது கம்பனிகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதேபொருளையே உடையது ;

(2) ''இலங்கை நாணயம்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

' ''புத்தகம், பதிவேடு, கூறு அல்லது ஆவணம் எதனதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி'' என்பது, அத்தகைய பிரதியினடியில், அது அத்தகைய புத்தகத்தின், பதிவேட்டின், கூறின் அல்லது ஆவணத்தின் உண்மைப் பிரதியெனவும் அத்தகைய புத்தகம் , பதிவேடு கூறு அல்லது ஆவணம் இன்னும் தகுந்த கட்டுக்காப்பிலுள்ளதெனவும் எழுதப்படும் அத்தாட்சியுடனுனதும், அத்தகைய அத்தாட்சி, அது எவ்வாளின் கட்டுக்காப்பிலுள்ளதோ அவ்வாளினுற் தேதியிடப் பட்டிருப்பதும், அவரது பெயரும் பதவிப் பெயரும் கொண்டு கையொப்பமிடப்பட்டிருப்பதுமான புத்தகத்தின் பதிவேட்டின், கூறின் அல்லது ஆவணத்தின் ஒரு பிரதி என்று பொருளாகும் ;

''கம்பனி'' என்பது, இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் காலத்திற்குக் காலம் வலுவிலிருக்கும் கம்பனிகள் தொடர்பிலான சட்டவாக்கங்களின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட கம்பனி ஒன்று என்று பொருளாகும்' ;

(3) ''பிணைப்பொறுப்புகள்'' என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை யிடுவதன் மூலமும் :—

' ''பிணைப்பொறுப்புகள்'' என்பது பங்குகள், பங்குத் தொகுதி, முறிகள், ஏதேனும் குழுமத்தின் மூலதனம், (வாக்குறுதிப் பத்திரங்கள் தவிர்ந்த) பத்திரங்கள், தொகுதிக் கடன்கள், தொகுதிக் கடன் முதல். அலகலகான நம்பிக்கைப் பொறுப்புத் திட்டத்திலுள்ள அலகுகள், அத்துடன் எண்ணெய்க்கான வேத்திறையிலுள்ள பங்குகள் என்று பொருளாகும்' ; அத்துடன்

(4) ''குறிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

' ''உல்லாசப் பிரயாண, விமான அல்லது கப்பற்சேவை'' என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உல்லாசப் பிரயாண, விமான அல்லது கப்பற் சேவையென விதிக்கப்படும் ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான சேவை என்று பொருளாகும்;'.

## 1973ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க கடன் இணக்க (திருத்தச்) சட்டம்

**கடன் இணக்கக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*1973 ஒத்தோபர் 3ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

1. இச்சட்டமானது, 1973ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, கடன் இணக்க [திருத்தச்] சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 54ஆம் பிரிவானது அப்பிரிவின் [1]ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது ; –

"[1] சபையானது, அதன் சொந்த எண்ணத்தின் பேரில் அல்லது அக்கறைகொண்டுள்ள எவரேனுமாளினுற் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில், விண்ணப்பமொன்றைத் தள்ளுபடிசெய்து, அல்லது சான்றிதழொன்றை வழங்கி, அல்லது இணக்கமொன்றை அங்கீகரித்துச் சபையினுற் கட்டளையொன்று ஆக்கப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அல்லது இணக்கப்பட்ட கடனைச்செலுத்துதல் முடிவடையுமுன்னர், அதனுல் ஆக்கப்பட்ட கட்டளையெதனையும் மீளவாயலாம் என்பதுடன், தகுதியானதென அது எண்ணுகின்றவாறுன அத்தகைய வேறு கட்டளையை அதுதொடர்பிலும் ஆக்கலாம்".

# 1973ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க
# வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் (திருத்தச்) சட்டம்

**1972ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்**

*1973 திசெம்பர் 11 ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

1. இச்சட்டம், *1973*ஆம் ஆண்டின் *52*ஆம் இலக்க வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் [திருத்தச்] சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. *1972*ஆம் ஆண்டின் *15*ஆம் இலக்க வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் [திருத்த]ச் சட்டத்தின் *9*ஆம் பிரிவு, அப்பிரிவின் [*6*] ஆம் உட்பிரிவில் ''உதவுதொகை செலுத்தற்குரிய வருமானம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது —

''உதவுதொகை செலுத்தற்குரிய வருமானம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது :

ஆயின், எப்படியிருப்பினும், *1973* ஏப்பிரில் *1*ஆம் தேதி தொடங்கி *1973* யூன் *30* இல் முடிவடைகின்ற காலத்தில் எந்த நேரத்திலேனும் அந்த ஆளினால் முதலீடு செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் *16* இஇ என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளான அங்கீகரித்த முதலீடு தொடர்பில், *1974* ஏப்பிரில் *1*ஆம் தேதி தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்காக [அ] என்னும் பகுதியின் கீழான கழிப்பெதையும் செய்வதற்கு, ஆளெவரும் [அந்த முதலீடு தொடர்பில் *1973* ஏப்பிரில் *1*ஆம் தேதி தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கென [ஆ] என்னும் பந்தியின் கீழான ஏதேனும் கட்டளையின் கீழ் கழிப்பதற்கு அவர்க்கு உரித்துள்ள அத்தகைய ஏதேனும் விட்டுக்கொடுப்பைக் கழித்திருப்பின்] உரித்துடையராதலாகாது.'.

# தேசிய அரசுப் பேரவையினது 1972ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மூலதனவரி (திருத்த)ச் சட்டம்

## 1971ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க மூலதனவரிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானவொரு சட்டம்

*1972 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 19 ஆம் தேதி சான்றிடப் பட்டது.*

1. இச்சட்டம் தேசிய அரசுப் பேரவையினது 1972 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மூலதனவரி (திருத்த)ச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தின்கணினிமேல் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும், 1971 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க மூலதன வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அவ்வுட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது :—

''(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக. தனியாளொருவர் 1971, மார்ச்சு 31ஆந் தேதியன்று மனைவியொருவரை அல்லது மனைவியொருவரையும் ஒரு அல்லது அதற்கதிகமான பிள்ளைகளை அல்லது தங்கிவாழுறவினர்களை அல்லது ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளையும் தங்கிவாழுறவினர்களையும் அல்லது ஒரு அல்லது அதற்கதிகமான பிள்ளைகளையும் தங்கிவாழுறவினர்களையுமுடையவராயிருக்கின்றவிடத்து, அவர்கள் குடும்பமொன்றுக அமைவர் என்பதோடு அத்தனியாள் அக்குடும்பத்தின் தலைவராகக் கருதப்படுதலும் வேண்டும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

''(அ) பிடுசியறி அல்லது பயனுகர்பவர் என்ற தன்மையில் சீவியவுரித்துக் கொண்டிருக்கும் ஏதேனும் ஆதனத்தின் பெறுமதி; அந்தப் பெறுமதியானது, அவரே அவ்வாதனத்தின் சொந்தக்காரார் என்றுற் போன்று தீர்மானிக்கப்பட்டதாதல் வேண்டும்;

(அஅ) பிடுசியறி என்ற தன்மையில், அவரின் இறப்புத் தவிர்ந்த வேறேதேனும் நிகழ்ச்சி நிகழ்ந்ததும் முடிவடைவதான நலவக்கறையொன்றை அவர் கொண்டிருக்கும் ஏதேனும் ஆதனத்தின் பெறுமதி ; அந்தப் பெறுமதியானது, அவரே அவ்வாதனத்தின் சொந்தக்காரர் என்றாற்போன்று தீர்மானிக்கப்பட்டதாதல் வேண்டும்;''

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை இடுவதன் மூலமும் :—

''(உ) குழுமமொன்றின் பங்காளராயிருப்பின் அக்குழுமத்திலுள்ள அவரின் அக்கறையின் பெறுமதி;'';

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை இடுவதன் மூலமும்:—

'' (ஏ) முதன்மைச் சட்டத்தின் நோக்கங்களுக்கென அவரின் வரிவிதித்தற்குரிய வருமானத்தை மதிப்பிடும்போது அவரின் ஏனைய முதலீடுகளின் காரணமாக எதுவேனும் கழிவுக்குரியவராய், அல்லது வருமான வரியிலிருந்து அச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நிவாரணம் பெறுவதற்கு அவர் உரிமையுடையவராயிருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ் சரி, இலங்கை அரசாங்கத்தின் பிணைகளில் அவர் செய்துள்ள முதலீடுகளும் அவரின் ஏனைய முதலீடுகளும்;'';

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், அப்பந்தியின் இறுதியிலுள்ள காற்புள்ளிக்குப்பதிலாக அரைப்புள்ளியினை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(உ) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(ஒ) இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது முதன்மைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின் அல்லது 67 (1) [ஆ] என்னும் பிரிவின் கருத்துக்குட்பட அங்கீகரிக்கப்பட்ட

தரும நிறுவனமொன்ருகவிருக்கும் தரும நம்பிக்கைப் பொறுப்பொன்றுக்கு ஏதேனும் ஆதனம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருந்தாற்றவிர, 1970 ஒத்தோபர் 26ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனல் 1971, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் அவரினல் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட அத்தகைய ஆதனம் ;

[ஓ] ஏதேனும் கம்பனியின் எவையேனும் பங்குகளுக்காக அல்லது தொகுதிக்கடன்களுக்காக அத்தகைய தனிப்பட்ட கம்பனிக்கு, அல்லது மதிப்பீட்டாளரின் கருத்துப்படி போதுமானதல்லதாகவிருக்கும் ஏதேனும் பிரதிபயனுக்காக வேறெவரேனுமாளுக்கு, 1970, ஒத்தோபர் 26 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனல் 1970, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எக்காலத்திலேனும் அவரினற் கைமாற்றப்பட்ட ஏதேனும் ஆதனம்; அத்துடன்

[ஔ] 1970, ஒத்தோபர் 26ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனல் 1971, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் ஆதனத்தை அவருக்குக் கைமாற்றியமைக்கான பிரதிபயனென்ருக அவரினற் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணம், மதிப்பீட்டாளரின் கருத்துப்படி அத்தகைய பிரதிபயன் போதியதல்லதாயின்;''; அத்துடன்

(2) அப்பிரிவினிறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும் :—

'' [3] குழுமமொன்றின் பங்காளரொருவர் அக்குழுமத்திற்கொண்டுள்ள அக்கறையின் பெறுமதியினை நிச்சயிக்கும்போது, அக்குழுமத்தின் நன்மதிப்பைக் கணக்கிலெடுத்தலாகாது.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் [1] ஆம் உட்பிரிவில், இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

[1] அவ்வுட்பிரிவின் [ஆ] என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஆஆ) 1971, மார்ச்சு 31ஆந் தேதியன்று இலங்கையில் வதியாதவரான ஆள் ஒருவராயின், முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் [2] ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அதன் இலாபங்களும் வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியிலுள்ள அவரது முதலீடு;";

[2] அவ்வுட்பிரிவின் [உ] என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"[உ] 1971 மார்ச்சு 31 ஆம் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு அவருக்குக் கிடைப்பதாயுள்ள, பீதேக்கொமிசத்துக்கிலக்காகின்ற ஆதனமாயிராத ஏதேனும் ஆதனத்தின்மீது இருக்கும் அத்தகைய ஏதேனும் அக்கறை;";

[3] அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ண) 1972, மார்ச்சு 31 ஆந் தேதிக்குப் பின்னரல்லாமல் முடிவுறுகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில் வருமானவரி அல்லது செல்வவரியாக அல்லது 1971, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் இறந்த எவரேனுமாளின் சாச்சொத்து அல்லது சாச்சொத்தின் ஏதேனும் பாகம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது மூலதனத்துட் சேர்க்கப்பட்டிருக்குமாயின் அத்தகைய சாச்சொத்து அல்லது சாச்சொத்தின் அத்தகைய பாகம் தொடர்பிலான சாச்சொத்து வரியாக அவரிடத்திலிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் தொகை;";

[4] அவ்வுட்பிரிவின் [த] என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை இடுவதன் மூலமும் :—

"[த] 1971, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் எக்காலத்திலாயினும் அவராற் கொடுக்கப்பட்ட ஏதேனும் நன்கொடை தொடர்பில் நன்கொடைவரியாக அவரிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் தொகை;";

[5] அவ்வுட்பிரிவின் [ந] என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை இடுவதன் மூலமும் :—

"[ந] 1971, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் அவரது மரணம் நிகழ்ந்த எவரேனுமாளின் சாச்சொத்தினது மரண சாதனத் தத்துவகாரராயிருப்பின், அச்சாச்சொத்துத் தொடர்பில் கொடுக்கப்படுதற்குரிய சாச்சொத்துவரி;";

[6] அவ்வுட்பிரிவின் [ர] என்னும் பந்தியினிறுதியிலுள்ள முற்றுப்புள்ளிக்குப் பதிலாக அரைப்புள்ளியினை இடுவதன் மூலமும் ; அத்துடன்

[7[ அவ்வுட்பிரிவின் [ர] என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

"[ல] அவர் சொந்தக்காரராகவிருப்பதும், ஆனல் 4ஆம் பிரிவின் [1] ஆம் உட்பிரிவின் [ஒ] என்னும் பந்தியினது அல்லது [ஓ] என்னும் பந்தியினது ஏற்பாடுகளின் காரணமாக வேறேராளின் மூல தனத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதுமான ஏதேனும் ஆதனம் ;

[வ] 1970, ஒத்தோபர் 26 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனல் 1971, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் ஆதனத்தை ஏதேனும் தனிப்பட்ட கம்பனிக்கு அவர் கைமாற்றியதற்குப் பிரதிபயனக அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள பங்குகளாகவும் தொகுதிக்கடன்களாகவும் இருக்கும், அக்கம்பனியிலுள்ள அவரது பங்குகளும் தொகுதிக்கடன்களும்; அத்துடன்

(ழ) 1970, ஒத்தோபர் 26 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனல் 1971, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் ஆதனத்தை அவர் கைமாற்றியதற்கான பிரதி பயனென்ருக அவரினுற் பெறப்பட்ட ஏதேனும் பணம், மதிப்பீட்டாளரின் கருத்துப்படி அத்தகைய பிரதிபயன் போதியதல்லதாயின்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அப்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இத்தாலிடப்படுகின்றது :—

9, வதிவற்ற வேறெரு கம்பனியில் பங்குகளை வைத்திருக்கின்ற வதிவுள்ள கம்பனியில், வதிவற்ற

கம்பனியொன்று பங்குகளை வைத்திருந்து முதலிற் கூறப்பட்ட வதிவற்ற கம்பெனி அதன் வரிவிதிக் கக்கூடிய மூலதனத்தின் மீதான மூலதன வரியினைச் செலுத்தியுள்ளதென ஆணையாளர் திருத்திப்பட்ட விடத்து, அப்போது, ஆணையாளர், பின்னுற் குறிக் பிடப்பட்ட வதிவற்ற கம்பனிக்கு, அக் கம்பனி யினுல் மறைமுகமாக வைத்திருக்கப்பட்ட பங்கு களின் பெறுமதிக்குரியதென ஆணையாளர் கருதக் கூடிய அதன் வரிவிதித்தற்குரிய மூலதனத்தின் அத் தகைய பாகந் தொடர்பில், ஆணையாளர் நியாய மானதெனக் கருதக்கூடியவாறுன அத்தகைய நிவா ரணத்தை மூலதன வரியிலிருந்து அளிக்கலாம்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக் கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

10. (1) இப்பிரிவின் ஏனைய ஏற்பாடுகளுக் கமைய, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, எவ ரேனுமாளின் மூலதனத்தினது பாகமாகவமையும் ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆத னத்தின் பெறுமதி, —

(அ) 1971, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அவரினுற் சொந்தமாக வைத்திருக்கப்பட் டவையும் 1970, மார்ச் 31 ஆந் தேதி யன்று அல்லது அதன் முன்னர் அவரினுற் கொள்ளப்பட்டவையுமான ஏதேனும் அசைவற்ற அல்லது ஏதேனும் கம்பனி யிலுள்ள பங்குகளைக் கொண்டிருக்கும் அசைவுள்ள ஆதனத்தின் விடயத்தில் மதிப்பீட்டுத் தேதியன்று இருந்த அவ் வாதனத்தின் சந்தைப்பெறுமதியிலிருந்து பத்துச்சத விகிதம் குறைக்கப்பட்ட தொகையாதல் வேண்டும்.

(ஆ) (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய் யப்பட்ட ஆதனம் தவிர்ந்த வேறேதேனும் ஆதனத்தின் விடயத்தில், மதிப்பீட்டுத் தேதியன்று அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதியாதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆளின் மூலதனத்தின் பாகமான அசைவுள்ள ஆதனமானது, பங்குகளைக் கைமாற்றுதற்கான உரிமையினை அதனது உறுப்புரைகள் மூலம் மட்டுப்படுத்துகின்ற, அல்லது வழங்கப்பட்ட பங்குகளில் அரைவாசிக்கும் மேலானவை நேரடியாக அல்லது நியமத்தர்கள் மூலமாக ஐந்து ஆட்களாலும், அவர்களது மனைவியர் அல்லது பராயமடையாத பிள்ளைகளினாலும் வைத்திருக்கப்படும் ஏதேனும் கம்பனியிலுள்ள (முன்னுரிமைப் பங்குகளல்லாத) பங்குகளைக் கொண்டிருந்து, விலைமதிப்பீட்டுத் தேதிக்கு முந்திய பன்னிரண்டுமாத காலத்துள் அப்பங்குகள் ஐக்கிய இராச்சியத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பங்குமாற்று நிலையத்தின் அலுவலக நிரலில் அல்லது இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்கெனத் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தரகர் கழகத்தினால் வழங்கப்பட்ட இதையொத்த தன்மைத்தான நிரலொன்றில் எடுத்தாளப்படவில்லையென ஆணையாளர் திருத்திப்பட்டவிடத்து, அத்தகைய பங்குகளின் பெறுமதி, ஆணையாளர் அவ்வாறு பணிப்பாராயின்,

(அ) இயங்கிக்கொண்டிருக்கிற கம்பனியொன்றென்ற முறையில் (நன்மதிப்புத் தவிர்ந்த) அக்கம்பனியின் இருப்புச் சொத்துக்கள் எல்லாவற்றிலுமிருந்து —

(i) கம்பனியின் எவையேனும் தொகுதிக் கடன்கள், தொகுதிக்கடன் பங்குத் தொகுதிகள், முன்னுரிமைப் பங்குகள் என்பவற்றின் சமப்பெறுமதி அல்லது மீட்டற் பெறுமதி என்ற இரண்டுள் எது கூடியதோ அது;

(ii) பணமாக அல்லது பணத்தின் பெறுமதியாகப் பிரதிபயனாக நன்னோக்கத்துடன் உறப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட கம்பனியின் கடன்கள் யாவையும்;

(iii) நீதியானதும் நியாயமானதுமான கணக்கீட்டு முறையில் கம்பனியின் எவையேனும் எதிர்கால அல்லது எதிர்பாராப் பொறுப்புக்களை

அல்லது தொகை கண்டறியப்பட முடியாத அத்தகைய எவையேனும் பொறுப்புக்களைக் குறிக்கும் அத்தகைய தொகை ; அத்துடன்

[iv] ஊழியர்களுக்கு ஒய்வூதியமளிப்பதற்கென அல்லது வேறுவிதமாக அவர்களினது அல்லது அவர்களிற்றங்கிவாழுநரது அல்லது அவர்களின் உறவினரது நன்மைக்கென வேறெவ்வகையிலும் இல்லாது நன்னோக்கத்துடன் செலவிடப்படக் கருதப்பட்டதும் தனியாக முதலீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் ஒதுக்குநிதியின் தொகை,

என்பனவற்றைக் கழித்ததன் பின்னர் கண்டறியப்படும் தொகையாகும்; அல்லது

[ஆ] அத்தகைய பங்குகள் அவ்வாளினல் 1970, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டனவாயின் (அ) என்னும் பந்தியின் கீழ் கண்டறியப்பட்டு பத்துச் சதவிகிதத்தினல் குறைக்கப்பட்ட தொகையாகும்.

[3] மூலதனவரி செலுத்தவேண்டியவரான எவரேனுமாள் தாமாக அல்லது வே்றெவரேனுமாளுடன் அல்லது ஆட்களுடன் பங்குடைமையாக ஒழுங்காகக் கணக்குகள் பேணப்பட்டுவரும் வியாபாரமொன்றைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து, ஆணையாளர். அத்தகைய வியாபாரத்தில் அத்தகைய ஆளினல் வைத்திருக்கப்படும் ஆதனம் ஒவ்வொன்றினதும் பெறுமதியைத் தனித்தனியே தீர்மானிப்பதற்குப் பதிலாக அத்தகைய வியாபாரத்தில் அத்தகைய ஆளினல் வைத்திருக்கப்பட்ட ஆதனங்களின் தேறிய பெறுமதியை முழுமையாகத் தீர்மானிக்கலாம்.

[4] ஏதேனும் ஆதனம் பகிரங்கச் சந்தையில் விற்கப்படமுடியாதென்பதனல் இப்பிரிவின் நோக்கங்களுக்காக அவ்வாதனத்தின் சந்தைப்பெறுமதி கண்டறியப்படமுடியாதவிடத்து, அத்தகைய ஆதனத்தின் பெறுமதி ஆணையாளர் நியாயமானதெனக் கருதும் அத்தகைய தொகையாதல் வேண்டும்.

[5] விலைமதிப்பீட்டுத் தேதியின் பின்னர் ஆனால் 1971. ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர், எவரேனுமாளினது மூலதனத்தின் பாகமாக வமையும் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் பெறுமதி

[அ] அவ்வாதனத்துக்குச் செய்யப்பட்டுள்ள எவையேனும் சீர்திருத்தங்கள், சேர்த்தல்கள் அல்லது மாற்றங்கள் காரணமாக அதிகரித்துள்ளவிடத்து, அத்தகைய சீர்திருத்தங்கள், சேர்த்தல்கள் அல்லது மாற்றங்களின் செலவு, விலை மதிப்பீட்டுத் தேதியன்றைய அவ்வாதனத்தின் பெறுமதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டும், அல்லது

[ஆ] அவ்வாதனத்துக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதம் காரணமாக அல்லது அவ்வாதனத்தின் மீதுள்ள ஏதேனும் கட்டிடத்தை அழித்ததன் அல்லது இடித்ததன் காரணமாக குறைந்துள்ள விடத்து, அத்தகைய சேதம், அழிவு அல்லது இடித்தலின் விளைவாக அவ்வாதனத்தின் பெறுமதி எவ்வளவால் குறைந்ததோ அவ்வளவுக்குச் சமமானதென ஆணையாளர் கருதும் தொகையொன்று. விலைமதிப்பீட்டுத் தேதியன்றைய அவ்வாதனத்தின் பெறுமதியிலிருந்து கழிக்கப்படலாம்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் பெறுமதி குறைந்துவிட்டதென எண்பிக்கும் பொறுப்பு அவ்வாறு வலியுறுத்தும் ஆளின் மேலதாதல் வேண்டும்.

[6] எவரேனுமாளின் மூலதனத்தினது பாகமாகவமையும் ஏதேனும் ஆதனம் —

[அ] 1970, மார்ச்சு 31 ஆந் தேதியின் பின்னர் ஆனல் 1971, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஒன்றிணைந்துவிட்ட அல்லது ஒருமித்துவிட்ட எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட, கம்பனிகளிலுள்ள அவரது பங்குகள் எவற்றுக்காகவேனும் அவரினுற் பெறப்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கின்றவிடத்து, அல்லது

[ஆ] எப்பங்குகள் தொடர்பில் 1970, மார்ச்சு 31 ஆந் தேதியின் பின்னர் ஆனல் 1971, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் மூலதனம் திருப்பிக்கொடுக் கப்பட்டதோ பங்கிடப்பட்டதோ அப்பங்கு களைக் கொண்டிருக்கின்றவிடத்து, அல் லது

[இ] அக்கம்பனியின் பங்குகளுக்காக அல்லது தொகுதிக்கடன்களுக்காக 1970, ஒத்தோ பர் 26 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனல் 1971, ஏப்பி றல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஏதே னும் ஆதனம் கைமாற்றப்பட்ட கம்பனி யொன்ருகவிருக்கும் ஏதேனும் தனிப் ப்ட்ட கம்பனியிலுள்ள பங்குகளைக் கொண் டிருக்கின்றவிடத்து,

அப்போது (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ளது எது எவ்விதமிருப்பினும், அவ்வாதனத்தின் பெறுமதி ஆணையாளரினல் தீர்மானிக்கப்பட்டுள்ள தொகை யொன்ருகவிருத்தல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, அப்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இத்தாலிடப்படுகின்றது :—

11. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விலை மதிப்பீட்டுத்தேதி என்பது—

(அ) 1971, மார்ச்சு 31 ஆந் தேதியன்று எவரேனுமாளின் மூலதனத்தினது பாக மாகவமையும் அசைவற்ற ஏதேனும் ஆதனம் தொடர்பில்—

(i) அவ்வாதனம் 1970, மார்ச்சி 31 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் அவரினுற் கொள்ளப்பட்ட தாயின், 1970, மார்ச்சு 30 ஆந் தேதியாதல் வேண்டும், அத்துடன்

(ii) அத்தகைய ஆதனம், 1970 மார்ச்சு 31 ஆந் தேதியின் பின்னர் ஆனல் ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டதாயின், அவ்வாறு கொள்ளப்பட்ட தேதியாதல் வேண் டும்; அத்துடன்

(ஆ) 1971, மார்ச்சு 31 ஆந் தேதியன்று எவரேனுமாளின் மூலதனத்தினது பாகமாகவமையும் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் தொடர்பில்—

(i) அத்தகைய ஆதனம் பங்குகளைக் கொண்டிருக்கின்றவிடத்து, அவ்வாதனம் 1970, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் கொள்ளப்பட்டதாயின் 1970, மார்ச்சு 31 ஆந் தேதியாதல் வேண்டும் அல்லது அவ்வாதனம் 1970, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டதாயின், அவ்வாறு கொள்ளப்பட்ட தேதியாதல் வேண்டும், அத்துடன்

(ii) அத்தகைய ஆதனம் பங்குகளைக் கொண்டிராதவிடத்து, 1971, மார்ச்சு 31 ஆந் தேதியாதல்வேண்டும்.''.

8 முதன்மைச்சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

''(2) ஓராமுட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் விளைவாகக் கணவனின் தேறிய மூலதனத்தின் மீதும் மனைவியின் தேறிய மூலதனத்தின் மீதும் தனித்தனியாக மூலதனவரி மதிப்பிடப்படுமிடத்து, கணவனினது தேறிய மூலதனத்தின் பெறுமதியும், மனைவியினது தேறிய மூலதனத்தின் பெறுமதியும், கணவனினாலும் மனைவியினாலும் கொடுத்துவப்பட்ட மூலதனத்திரட்டுக்களின்படி அவ்வாழ்க்கைத் துணைவர் இருவரில் ஒருவரினது அல்லது இருவரினதும் பிள்ளையாக அல்லது தங்கிவாழுறவினராகவுள்ள எவரேனும் தனியாளினது தேறிய மூலதனத்தின் பெறுமதியும் ஒன்றுசேர்க்கப்படுதல் வேண்டுமென்பதோடு அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட்டிராவிடின் கணவனினால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய மூலதனவரி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கண்டறியப்படுதல் வேண்டும். அவ்வாறு கண்டறியப்பட்ட மூலதனவரியின் தொகை, அவர்களிருவரினதும் தேறிய மூலதனத்தின் பெறுமதி, அவர்களிருவரின் ஒன்று சேர்ந்த தேறிய மூலதனத்தின் பெறுமதிக்கு என்ன விகிதமாகவுள்ளதோ அதே விகிதமாகப் பங்கிடப்படுதல் வேண்டும்.''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

23. முதன்மைச் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற் போலவும் அவை முதன்மைச் சட்டத்தினையன்றி இச்சட்டத்தினையே குறிப்பீடு செய்வன என்றாற் போலவும், அத்துடன்—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''வரி மதிப்புச் செய்யப்பட்ட வருமானம், செல்வம் அல்லது நன்கொடையின் தொகையும், விதிக்கப்பட்ட வரியின் தொகையும்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக ''வரி மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய மூலதனத்தின் தொகையும் விதிக்கப்பட்ட மூலதன வரியின் தொகையும்'' என்னுஞ்சொற்கள் இடப்பட்டிருந்தாற் போலவும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''வரி வீதத்திருத்தத்தின் காரணமாக ஏதேனும் வரி மதிப்பீட்டறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள வரியினது தொகையை மாற்றுவது அவசியமானவிடத்து'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''மூலதனவரி வீதத் திருத்தத்தின் காரணமாக ஏதேனும் வரிமதிப்பீட்டறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள மூலதன வரியினது தொகையை மாற்றுவது அவசியமானவிடத்து'' என்னுஞ் சொற்கள் இடப்பட்டிருந்தாற் போலவும்,

அவ்வேற்பாடுகள் ஏற்புடையனவாதல்வேண்டும்.''.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

24. முதன்மைச் சட்டத்தின் 96 ஆம் பிரிவினது ஏற்பாடுகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற் போலவும் அவை முதன்மைச் சட்டத்தினையன்றி இச்சட்டத்தினையே குறிப்பீடு செய்வன என்றாற் போலவும், அப்பிரிவின் (2) ஆம்

உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''வரி மதிப்பிடப்பட்ட வருமானம், செல்வம் அல்லது நன்கொடையின் தொகை அல்லது விதிக்சப்படும் வரியின் தொகை'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''வரிமதிப்பிடப்பட்ட தேறிய மூலதனத்தின் தொகை அல்லது விதிக்கப்பட்ட மூலதனத்தின் தொகை'' என்னுஞ் சொற்கள் இடப்பட்டிருந்தாற் போலவும் அவ்வேற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

25, எவரேனுமாள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் மூலதனவரி மதிப்பீடொன்று செய்யப்பட்டு அவ்வாள் அத்தகைய அறவீட்டைச் செலுத்தியிராதவிடத்து, அத்தகைய ஆள் அல்லதுஅவரது குடும்பவுறுப்பினர் எவரேனும், ஆணையாளரின் எழுத்திலான அனுமதியுடனன்றி, விடயத்திற்கேற்ருற்போல அவ்வாளுக்கு அல்லது அவரது அக்குடும்பவுறுப்பினருக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனமெதனையுமேனும் அசைவற்ற ஆதனத்திலுள்ள எவையேனும் உரிமைகளையேனும் வேறெவரேனுமாளுக்குப் பராதீனப்படுத்துதலாகாது:

எனினும், அத்தகைய ஆள் அல்லது அவரது குடும்பவுறுப்பினர் ஒருவர் ஆணையாளருக்கறிவித்ததன் பின்னர், விடயத்திற்கேற்ருற்போல அவருக்கு அல்லது அவரது குடும்பத்தின் அவ்வுறுப்பினருக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனம் எதனையும் அல்லது அசைவற்ற ஆதனம் எதனிலுமுள்ள உரிமைகள் எவற்றையும் குடியரசுக்குப் பராதீனப்படுத்தலாம்,''.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(1)* அப்பிரிவினை, 27 ஆம் பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவென மீளவிலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

*(2)* அப்பிரிவினிறுதியில் பின்வரும் உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும்:

"(2) இருபத்தாறும் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட ஆட்சேபனை அறிவித்தலொன்று பற்றி விசாரணையினைத் தொடங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும், ஆணையாளர், ஏதேனும் நியாயமான காரணத்திற்காக (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரினுற் கொடுத்துதவப்பட்ட நிரலுக்கு மேலும் பெயர்களைக் கூட்டுவதற்கு ஆட்சேபனைகாரரை, அனுமதிக்கலாம்.''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் [14] ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

" (1) இச்சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட வரிமதிப்பீடொன்றுக்கெதிராகச் செல்லுபடியுள்ள ஆட்சேபனை அறிவித்தல் அல்லது மேன்முறையீடு எதுவும் கொணரப்படாதவிடத்து அல்லது இச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட வரிமதிப்பீடொன்றுக்கெதிரான ஆட்சேபனை பற்றிய அறிவித்தலொன்று 29 ஆம் பிரிவின்கீழ் மறுக்கப்பட்டவிடத்து அல்லது ஆட்சேபனை அல்லது மேன்முறையீட்டின்மீது வரிமதிப்பீடொன்று துணியப்பட்டவிடத்து, ஆட்சேபனை அல்லது மேன்முறையீட்டின் மீது செய்யப்பட்டவாறுன அல்லது துணியப்பட்டவாறுன வரிமதிப்பீடு இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்குமாக முற்றுனதும் முடிவானதுமாதல் வேண்டும்.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

[1] அப்பிரிவின் [1] ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

''[1] மூலதன வரி விதிக்கப்பட்டுள்ள ஆள் எவரும் வரிமதிப்பீட்டறிவித்தலில் அல்லது 38 ஆம் பிரிவின்கீழ் அல்லது 39ஆம் பிரிவின்கீழ் அல்லது 42 ஆம் பிரிவின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட வேறேதேனும் அறிவித்தலில் கூறப்பட்டுள்ள முறையில் வரியினைச் செலுத்த முடியாதவராயின், அவர், 37ஆம் பிரிவின்கீழ் தீர்ப்பளிக்குநர் சபையானது வழங்கத் தத்துவமளிக்கப்பட்டுள்ளவாறுன ஏதேனும் அத்தகைய நிவாரணத்துக்கென அச் சபைக்கு மனுச் செய்யலாம். நிவாரணத்திற்கான மனு ஒவ்வொன்றும் எழுத்

தில் இருத்தல் வேண்டுமென்பதோடு விடயத்திற் கேற்ருற் போல, வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தல் அல்லது வேறு அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியின் பின்னர் முப்பது நாட்களுக்குள் குழாத் தவிசாள ருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.'';

அத்துடன்

[2] அப்பிரிவினிறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்ப தன் மூலமும் :—

''[4] மூன்ருமுட்பிரிவின் கீழ் சபைக்கு ஆற்றுப்படுத்தப் பட்ட ஏதேனும் மனு மீது சபையின் கட்டளை யொன்று முடிவானதும் இறுதியானதுமாதல் வேண்டுமென்பதோடு மேன்முறையீடு. எழுத் தாணை, அதிகாரக்கட்டளை என்பன மூலமாகவாயி னுஞ் சரி வேறுவிதமாகவாயினுஞ் சரி, நீதி மன்றமெதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலு மாகாது''.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

37. (1) முப்பத்தாரும் பிரிவின்கீழ் எவரேனு மாளிஞல் செய்யப்பட்ட மனுவொன்றன் மீது அவருக்குச் சபையானது வழங்கக்கூடிய நிவா ரணம் பின்வருவனவற்றுள் ஒன்ருே பலவோ வாதல் வேண்டும் :—

[அ] மூலதனவரியை அல்லது அவ்வரியின் ஏதேனும் தவணைப்பணத்தைக் கொடுப் பதற்கான கால நீடிப்பு ;

[ஆ] மூலதனவரியினைத் தவணைப்பணங் களில் கொடுப்பதற்கான அனுமதி ;

[இ] மூலதனவரியைச் செலுத்துவதற்கென கென அவருக்கு அனுமதிக்கப்பட்ட தவணையின் எண்ணிக்கையினை அதி கரித்தல் ;

[ஈ] அவ்வாளின் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் குடியரசுக்கு அளிப் பதற்கு அனுமதி.

[2] ஆளொருவரது ஏதேனும் அசைவற்ற வாதனத்தைக் குடியரசுக்கு அவர் கொடுப்பதற்குச் சபையினுல் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றவிடத்து அந்த ஆளினுற் குடியரசுக்குக் கொடுக்கப்படவுள்ள அசைவற்ற ஆதனத்தைச் சபை குறிப்பிட்டுக்காட்டலாம் ;

எனினும், ஈடொன்றுக்கு அமைந்ததாகவிருக்கும் அசைவற்ற ஆதனம் எதனையும், விசாரிக்கப்படுவதற்கு ஈடுவாங்குநருக்குச் சந்தருப்பமளித்ததன் பின்னரன்றியும், ஈட்டின் பேரால் போகுமதியாகவுள்ள பணங்களைக் கொடுப்பதற்கும் ஈடுவைத்தவரினுல் கொடுபடவேண்டிய மூலதனவரியை அறவிடுவதற்கும் அத்தகைய ஆதனத்தின் பெறுமதி போதுமானதெனச் சபை திருத்திப்பட்டாலொழியவும், சபையானது அத்தகைய ஆதனம் எதனையும் குறிப்பிடுதலாகாது.''.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

[1] அப்பிரிவின் [1] ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"[1] முப்பத்தாரும் பிரிவின் கீழ் எவரேனும் ஆள் செய்யும் மனுவின் மீதான அதனது கட்டளையால் சபையானது அந்த ஆளுக்குச் சொந்தமான குறிப்பிடப்பட்ட அசைவற்ற ஆதனம் எதனையும் குடியரசுக்குக் கொடுக்க முனைய அனுமதியளித்திருக்கின்றவிடத்து, அவர், அந்தக் கட்டளைபற்றி அவருக்கு அறிவிக்கும் அறிவித்தல் கிடைத்த தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் —

[அ] அத்தகைய ஆதனம் தொடர்பிலான முழு விபரங்களையும் ; அத்துடன்

[ஆ] அத்தகைய ஆதனம் அவருடையது என்பதற்கான உரித்துப் பற்றியும்,

கூறும் எழுத்திலான அறிவித்தலொன்றை ஆணையாளருக்குக் கொடுத்தல் வேண்டும் '';

[2] அப்பிரிவின் [6] ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"[6] எவரேனும் ஆளின் அசைவற்ற ஆதனம் [3] ஆம் உட்பிரிவின் கீழ் குடியரசுக்கு உரித்தாக்கப்பட்டு, அந்த ஆள் தொடர்பில் செய்யப்படும் மூலதன வரி மதிப்பீட்டில் அந்த ஆதனத்துக்குக் குறிக்கப்பட்ட பெறுமதியானது அத்தகைய ஆளாற் கொடுபடற்பாலதான மூலதனவரித் தொகையிலும் பார்க்கக் குறைவாயிராதவிடத்து, அத்தகைய ஆள் மூலதனவரியைக் கொடுத்துவிட்டார் என்று கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அவர் —

[அ] மூலதனவரி மதிப்பீட்டில் அவ்வாதனத்துக்குக் குறிக்கப்பட்ட பெறுமதிக்கு 1972, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதி கொண்டிருக்கும் அதே விகிதசமத்தை, அவர் தொடர்பாகச் செய்யப்பட்ட அத்தகைய மதிப்பீட்டில் அவ்வாதனத்துக்குக் குறிக்கப்பட்ட பெறுமதிக்கும் அவரினாற் கொடுபடவேண்டிய மூலதனவரிக்குமிடையேயான வேறுபாட்டுக்கு எந்தத் தொகை கொண்டிருக்கின்றதோ அந்தத் தொகையொன்றுக்கு, அல்லது

[ஆ] அத்தகைய மதிப்பீட்டில் அவ்வாதனத்துக்குக் குறிக்கப்பட்ட பெறுமதிக்கும் அவரினாற் கொடுபட வேண்டிய மூலதனவரிக்குமிடையேயான வேறுபாட்டுக்குச் சமமான தொகையொன்றுக்கு.

அவர் தொடர்பாகச் செய்யப்பட்ட மூலதனவரி மதிப்பீட்டில் அவ்வாதனத்துக்குக் குறிக்கப்பட்ட பெறுமதி 1972, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதியையும் விஞ்சுகின்றது அல்லது விஞ்சவில்லை என்பதற்கிணங்க உரித்துடையவராதலும் வேண்டும்.

அந்த ஆள் தொடர்பிற் செய்யப்படும் மூலதன வரி மதிப்பீட்டில் அந்த ஆதனத்துக்குக் குறிக்கப்பட்ட பெறுமதியானது, மூலதன வரியாக அவ்வாளாற் கொடுபடற்பாலதான தொகையிலும் பார்க்கக் குறைவாயிருக்குமிடத்து, மூலதனவரியின் மிச்சத் தொகை, அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தலில் ஆணையாளர் குறிப்பிடக்கூடிய அத்தகைய தேதி

யன்று அல்லது அதற்குமுன்னர் ஒரே தொகை யாக அல்லது அத்தகைய எண்ணிக்கையான தவணைப்பணங்களாகக் கொடுக்கப்படுதல் வேண் டும். அவ்வாறு கொடுக்கப்படாத தொகை எது வும் தவணைதவறிய தொகையாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு அந்த ஆள் இந்தச் சட்டத் தின் நோக்கங்களுக்காகத் தவணைதவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.''; அத்துடன்

(3) ஆறுமுட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரி வினை உட்புகுத்துவதன் மூலமும் :—

''[7] ஆறுமுட்பிரிவின் கீழ் ஆளொருவர் எத்தொகைக்கு உரித்துடையவராயிருக்கின்றாரோ அத்தொகையைச் கொடுப்பனவு செய்யுமுன்னர், அவ்வாளிடமிருந்து அரசாங்கத்திற்குப் போகுமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகை அல்லது எவையேனும் பணத் தொகைகள் அத்தகைய தொகையிலிருந்து கழிக் கப்படலாம்.''

17. முதன்மைச்சட்டவாக்கத்தின் 42ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

42. [1] எவரேனுமாளினால் கொடுபடவேண் டிய மூலதனவரி முழுமையும் அல்லது அதன் பாகமொன்று தவணை தவறியிருக்கின்றவிடத்து, தவணை தவறிய தொகையில் ஐந்து சதவீதத்துக் குச் சமமான ஒரு தொகை அத்தகைய தொகைக் குச் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதோடு ஆணை யாளர் அத்தகைய ஆளுக்கு எழுத்திலான அறி வித்தலொன்றை விடுத்து அந்த அறிவித்தலிற் குறிப்பிடப்பட்டிருக்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய தொகையை அவ் வாறு சேர்க்கப்பட்ட தொகையுடன் சேர்த்துக் கொடுக்கும்படி பணிக்கலாம். அவ்வாறு கொடுப் பனவு செய்யப்படாதவிடத்து, ஆணையாளர் அத் தகைய தொகை அறவிடப்படும்வரை, தவணை தவறியுள்ள தொகையின் பதினைந்து சதவீதத் துக்கு மேற்படாத மேற்கொண்ட தொகையை அல்லது தொகைகளை அந்தத் தொகையுடன் சேர்க்கலாம்.

[2] முப்பத்தைந்தாம் பிரிவின் கீழான மேன்முறையீடு தீர்மானிக்கப்படுமிடத்து, ஓராமுட்பிரிவின் கீழ் ஏதேனும் தொகை அல்லது தொகைகள் சேர்க்கப்பட்ட தவணைதவறிய மூலதனவரித் தொகை குறைக்கப்பட்டிருப்பின், அப்போது அத்தகைய தொகை அல்லது தொகைகள் அவ்வாறு குறைக்கப்பட்டதொகையின் மீது கணக்கிடப்படல் வேண்டும் ''.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு அப்பிரிவினிறுதியில் பின்வரும் உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" [3] 1970, ஒத்தோபர் 26 தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஆதனம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருந்தது, அல்வாதனத்துக்குரியதென ஆணையாளருக்குத் தோற்றும் மூலதனவரியின் அத்தகைய பாகம் நன்கொடையளித்தவரிடமிருந்து சேகரிக்கப்பட அல்லது அறவிடப்படமுடியாதவிடத்து, அப்போது, அவ்வாதனத்துக்குரிய மூலதனவரியின் அத்தகைய பாகம், நன்கொடைபெற்றவரின் மீது மதிப்பீடொன்று செய்யப்படவில்லை என்பது எப்படியிருப்பினும், நன்கொடைபெற்றவரிடமிருந்து சேகரிக்கப்படலாம் அல்லது அறவிடப்படலாம். அத்துடன் அதற்கிணங்க, மூலதனவரியைச் சேகரித்தல், அறவிடுதல் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நன்கொடை பெற்றவருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். இவ்வுட்பிரிவில், "நன்கொடையளிப்பவர்", "நன்கொடை பெற்றவர்" என்பன, முதன்மைச் சட்டத்தின் 129 ஆம் பிரிவில் அச் சொல்லமைப்புக்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டனவாக இருக்கும்.''.

19. ஐம்பத்தோராம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தாலுட்புகுத்தப்படுகின்றது ; அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும் :—

51 அ. [1] [அ] எவரேனும் ஆளினுற் கொடுபடற்பாலதான மூலதனவரி அல்லது மூலதனவரியின் பாகம், அவ்வாள் சீவியவுரித்துக் கொண்டிருக்கும் ஏதேனும் ஆதனம் தொடர்பிலானதாயின், அந்த ஆள் வரிமதிப்பு அறிவித்தல் அவருக்குக் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் ஆணையாளருக்குக் கொடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாதனத்துக்குரிய அவ்வாளினுல் கொடு

படவேண்டிய, அத்தகைய மூலதனவரித் தொகையை அல்லது மூலதனவரியின் அத்தகைய பாகத்தை அவ்வாதனத்தின் மீதான பொறுப்பொன்ருகக் கருதுமாறு ஆணையாளரைக் கேட்டுக்கொள்ளலாம்; அத்துடன், அதன்மேல். அவ்வாதனம் அத் தொகையைக் கொடுப்பதற்கெனச் சிறப்பாகக் கட்டுப்பட்டதாகவும் பொறுப்புடையதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் இத்தால் அவ்வாறு வெளிப்படுத்தவும்படுகின்றது.

[ஆ] இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆதனத்துக்குரியதான மூலதனவரி தவணை தவறுயிருக்கின்றவிடத்து, அப்பந்தியின் கீழான அறிவித்தலொன்று, அத்தகைய மூலதனவரி எவ்வாளிடமிருந்து போகுமதியாகவுள்ளதோ அவ்வாளினல் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

[இ] இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்று காணியைக் கொண்டிருக்கும் ஏதேனும் ஆதனத்துக்குரிய மூலதன வரி தொடர்பிலானதாயின், ஆவணப்பதிவுக் கட்டளைச்சட்டத்தின் கீழ்ப் பதியப்படுவதற்கான அக்காணி தொடர்பிலான சாதனமொன்று சமர்ப்பிக்கப்படும்போது அக்காணி தொடர்பில் கூறப்படவேண்டுமென அக்கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினல் தேவைப்படுத்தப் பட்டவாறுன அக்காணி தொடர்பிலான அத்தகைய விபரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

[2] காணியைக் கொண்டிருப்பதான ஏதேனும் ஆதனத்தைச் சார்ந்த மூலதனவரித் தொகை தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டவிடத்து அல்லது கொடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றவிடத்து, ஆணையாளர்—

[அ] அவ்வாதனந் தொடர்பிலான அவசியமான விபரங்களை எடுத்துக்காட்டுவதும், அவ்வாதனத்துக்குரிய மூலதனவரித் தொகையைக் கொடுப்பதற்கு அவ்வாதனம் கட்டுப்பட்டதெனவும் பொறுப்புடையதெனவும் கூறுவதுமான அறிவித்தலொன்றைப் பதிவு செய்யப்படுவதற்கென இயைபான காணிப் பதிவாளரிடம் ஒப்படைப்பித்தல் அல்லது அவருக்கு அனுப்புவித்தல் வேண்டும்

[ஆ] இச்சட்டத்தின் 75 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள முறையில், முதன்மைச் சட்டத்தின் 124 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்ருற்போன்று ஏற்புடைத்தாக்கப்பட்ட அவ்வேற்பாடுகளில் அடங்கியிருப்பது எது எவ்விதமிருப்பினும், அவ்வாதனத்துக்குரிய மூலதன வரி அறிவித்தலிற் குறிப்பிடப்படும் காலத்துள் அவ்வாதனத்தில் அக்கறையுள்ள எவரேனுமொருவரால் கொடுக்கப்பட்டாலொழிய, அத்தகைய ஆதனம் அல்லது அதன் ஒரு பாகம் குடியரசுக்கு உரித்தாக்கப்படக்கூடியதாகும் எனக் கூறும் அறிவித்தலொன்றை, போதுமான விளம்பரத்தைக் கொடுக்கக்கூடும் என அவருக்குத் தோற்றும் அத்தகைய முறையில் வெளியிடுவித்தல் வேண்டும், அத்துடன்

[இ] அவ்வாதனத்துக்குரிய மூலதனவரி, [ஆ] என்னும் பந்தியின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தலிற் குறிப்பிடப்படும் காலத்துள் கொடுக்கப்படவில்லையாயின்—

[i] அத்தகைய மூலதன வரியின் தொகையையும், அத்துடன்

[ii] ஓராமுட்பிரிவின் கீழான அறிவித்தல் எவ்வாளினுற் கொடுக்கப்பட்டதோ அல்லது கொடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றதோ அவ்வாளின் பெயரையும், முகவரியையும், அத்துடன் அத்தகைய ஆள், ஒற்றியுடையோன் ஒருவன் என்ற முறையில் அவ்வாதனத்தில் சீவியவுரித்தொன்றை மட்டுமே உடையவராகவிருக்குமிடத்து, கிடைக்குமானுல் அவ்வாதனச் சொந்தக்காரர் பெயரையும் முகவரியையும்,

குறிக்கும் கூற்ருென்றை நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

[3] இரண்டாமுட்பிரிவின் [அ] என்னும் பந்தியின் கீழ் காணிப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்று, காணி தொடர்பிலான சாதனமொன்றைப் பதிவு செய்வதற்கென ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அவரினுற் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு அந் நோக்கங்களுக்காக, அது அறிவித்தல் கூறும் காணி தொடர்பிலான சாதனமொன்றெனக் கருதப்படுதலும் வேண்டும்.

[4! எக்காணி தொடர்பில் இரண்டாமுட்பிரிவின் [அ] என்னும் பந்தியின் கீழான அறிவித்தலொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதோ அத்தகைய ஏதேனும் காணிக்குரிய மூலதனவரி கொடுக்கப்படுமிடத்து. ஆணையாளர், அத்தகைய அறிவித்தலின் பதிவினை நீக்குமாறு காணிப் பதிவாளரை எழுத்தில் வேண்டுதல் வேண்டுமென்பதோடு, காணிப் பதிவாளர் அதன்மேல் அத்தகைய பதிவினை நீக்குதலும் வேண்டும்

[5] இரண்டாமுட்பிரிவின் [இ] என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றினைப் பெற்றதன் மேல், நிதியெனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர். கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், கூற்றில் குறிப்பிடப்பட்ட ஆதனத்தை அல்லது அவ்வாதனத்துக்குரிய மூலதனவரியை அறவிடுவதற்குப் போதுமானதென ஆணையாளர் கருதக்கூடிய அவ்வாதனத்தின் அந்தகைய பாகத்தைக் குடியரசுக்குரித்தாக்கலாம் அத்தகைய கட்டளை, அது கசற்றில் வெளியிடப்பட்டதன் மேல், அக் கட்டளையிற் குறிப்பிடப்படும் ஆதனத்தை அல்லது ஆதனத்தின் பாகத்தைப் பாதிப்புக்களெவையுமின்றிக் குடியரசுக்குரித்தாக்கும் பயனுடையதாதல் வேண்டும்.

[6] ஐந்தாமுட்பிரிவின் கீழான கட்டளையொன்றன் மூலம் குடியரசுக்குரித்தாக்கப்பட்ட ஆதனத்தின் அல்லது ஆதனத்தினது பாகத்தின் பெறுமதி அவ்வாதனத்துக்குரிய மூலதனவரித் தொகையிலும் கூடிதலாகவிருக்கின்றவிடத்து, அப்போது. 89 ஆம் பிரிவின் [6] ஆம் உட்பிரிவிற் காட்டப்பட்டுள்ள முறையில் கணக்கிடப்படும் தொகை

யொன்று, அவ்வாதனம் எவ்விடத்தில் அமைந்துள்ளதோ அவ்விடத்தின் மீது நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்றத்திடம் அதனைக் கையாளுதல் தொடர்பில் அந் நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கெனச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தொகையானது, அவ்வாதனம அல்லது அதனொருபாகம் குடியரசுக்குரித்தாக்கப்படும் நேரத்தில் எந்த நிர்ணயத்துக்கு அமைந்திருந்ததோ அதே நிர்ணயத்துக்கு அமைந்ததாதல் வேண்டும்.

[7] ஓராமுட்பிரிவின் கீழான அறிவித்தலொன்று பணத்தைக் கொண்ட ஏதேனும் ஆதன நிதி தொடர்பிலானதாயின், அவ்வாதனத்துக்குரிய மூலதனவரித் தொகையைக் குறிப்பிட்டு அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு ஆணையாளர் சான்றிதழொன்றினை வழங்கலாம். அத்துடன் நீதிமன்றமானது அதன் மேல் அவ்வாதனத்திலிருந்து அத்தகைய தொகையைக் கொடுக்குமாறு பணித்தல் வேண்டும்.

[8] ஓராமுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் ஆதனத்துக்குரிய மூலதனவரித் தொகையைக் கொடுப்பதில் தவணை தவறியதன் காரணமாக, 42ஆம் பிரிவின் [1] ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய தொகையோடு ஏதேனும் பணத்தொகை அல்லது எவையேனும் பணத்தொகைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டவிடத்து, ஆணையாளர், தமது தற்றுணிபில், அவ்வாறு சேர்க்கப்பட்ட தொகை முழுவதையும் அல்லது தொகையின் ஒரு பாகத்தை விட்டுவிடலாம்.''.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்த்தல் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

''[6] குழாத்துக்கெனச், செயலாளர் ஒருவரையும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உதவிச் செயலாளர்களையும் நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர் நியமிக்கலாம்.''.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு, அப்பிரிவின் [3] ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும், அவ்வுட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும் இத் தாற்றிருத்தப்படுகின்றது :—

"[3] குழாத்தின் தவிசாளர் குழாத்தின் உதவிச் செயலாளர் ஒருவரை, தீர்த்துவைக்குநர் சபையின் செயலாளராக இருக்க வெனப் பெயர் குறிக்கலாம்.".

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

57. குழாத்தின் தவிசாளருக்கும் குழாத்தின் சபை உறுப்பினர்க்கும் குழாத்தின் செயலாளருக்கும் உதவிச் செயலாளர்களுக்கும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராற்றீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஊதியம் கொடுக்கப்படலாம்.".

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

72. இறந்த ஆளொருவரின் சாச்சொத்தினது மரணசாதனத் தத்துவக்காரர், அவ்வாறிறந்தவர் உயிரோடிருந்திருப்பின் செலுத்தற்குரியவராயிருந்திருக்கக்கூடிய மூலதனவரி விதிக்கப்படக்கூடியவராதல் வேண்டுமென்பதோடு அத்தகைய ஆள் உயிருடன் இருந்திருப்பின் இச்சட்டத்தின்கீழ் செய்வதற்கு ஆளாயிருந்திருக்கக்கூடிய செயல்கள், கருமங்கள் விடயங்கள் எல்லாவற்றையும் அம் மரணசாதனத் தத்துவகாரர் செய்வதற்கு ஆளாதலும் வேண்டும் ;

எனினும் —

[அ] இறந்த ஆளினது ஏதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில் மரணசாதனத் தத்துவகாரருக்கெதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படுதலாகாது; அத்துடன்

[ஆ] இப்பிரிவின்கீழ் மரணசாதனத் தத்துவகாரரின் பொறுப்பு —

(i) மூலதன வரியினைச் செலுத்துவதற்கான பொறுப்பு இப்பிரிவின் கீழ் எழுமென மரணசாதனத் தத்துவகாரருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியில் அவரது உடமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள இறந்தவரின் சொத்தினது பணத்தொகை வரையெனவும்; அத்துடன்

(ii) பயன்பெறுநரொருவரைச் சென்றடைந்திருக்கக் கூடிய சாச்சொத்தின் ஏதேனும் பாகத்தினது பணத்தொகை வரையெனவும்,

வரையறுக்கப்படுதல் வேண்டும்.''

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

[1] ,'கொள்ளப்பட்ட என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

'‘‘முகவர் என்பது வதியாத ஆளொருவர் தொடர்பில் —

[அ] அத்தகைய ஆளின் இலங்கையிலுள்ள முகவர், தத்துவகாரர், காரணீகர், பெறுநர், அல்லது முகாமையாளரை உள்ளடக்கும்; அத்துடன்

[ஆ] இலங்கையில் எழுகின்ற அல்லது இலங்கையிலிருந்து பெறப்படும் எவையேனும் இலாபங்களை அல்லது வருவாயினை அவ்வாள் இலங்கையிலுள்ள எவ்வாள் மூலம் பெறுகின்றாரோ அத்தகைய எவரேனுமாளையும் உள்ளடக்கும்;';

[2] ''மரணசாதனத் தத்துவகாரர்'' என்பதன் வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

'‘‘குடும்பம்'' என்பது 3 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட்ட குடும்பமொன்றென்று பொருளாகும் ;

‘‘ஒற்றியுடையோன்'' என்பது பீதேக்கொம்மிசம் காரணமாக ஏதேனும் ஆதனத்தில் பயன் அக்கறை கொண்டுள்ள எவரேனுமாளையும் உள்ளடக்கும்;';

[3] ''தேறிய மூலதனம்'' என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை இடுவதன் மூலமும் :

''தேறிய மூலதனம்'' என்பது—

[அ] இலங்கையில் மூலதனத்தினையுடைய ஒரு வதியாக் கம்பனி தவிர்ந்த எவரேனுமாள் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது,—

(i) பணத்திலான அல்லது பணத்தின் பெறுமதியிலான பிரதிபயன் அல்லது முழுப் பிரதிபயன் இல்லாமல் உறப்பட்ட கடன் ;

(ii) முழுமையாக அவரது சொந்த நன்மைக் கல்லாது உறப்பட்ட கடன் ;

(iii) அத்தகைய மீளளிப்பைப் பெறமுடியாததாயிருந்தாலொழிய வேறெவரேனு மாளிடமிருந்து மீளளிப்புப் பெற உரிமையுள்ள ஒரு கடன் ;

(iv) இச்சட்டத்தின் கீழ் அவரது மூலதனத்திலிருந்து தவிர்த்து விடப்பட்ட அவரது ஆதனம் எதன் மீதும் பொறுப்பாக்கப்பட்ட, பிணையாக்கப்பட்ட, உறப்பட்ட அல்லது ஆதனம் தொடர்பிலான கடன்: அத்துடன்

(v) இலங்கையில் கொடுக்கப்படவேண்டுமென ஒப்பந்தஞ் செய்யப்பட்டிருந்து அல்லது இலங்கையிலுள்ள ஆதனத்தின் மீது பொறுப்பாக்கப்பட்டு அல்லது பிணையாக்கப்பட்டிருந்து, இலங்கைக்கு வெளியே அவரினல் உறப்பட்ட ஏதேனும் கடன்,

தவிர, 1971, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அவ்வாளினற் கொடுக்கப்படவேண்டிய எல்லாக் கடன்களின் மொத்தப் பெறுமதியிலும் பார்க்க அத் தேதியன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட அவ்வாளின் மூலதனத்தினது மொத்தப் பெறுமதி, என்ன தொகையினல் மிகையாக இருக்கின்றதோ அந்தத் தொகை என்று பொருளாகும் ; அத்துடன் ஆதனத்தின் வெவ்வேறு பகுதிகளின் மீது பொறுப்பாக்கப்பட்ட ஒரே கடனை ஒரு தடவைக்கு மேலாகக் கணக்கிடுதலாகாது.

[ஆ] இலங்கையில் மூலதனத்தையுடைய வதியாக் கம்பனியொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, இலங்கையில் அதன் வியாபாரத்தைக் கொண்டு நடத்துவதில் அக்கம்பனியினுல் உறப்பட்ட கடன் அல்லது பொறுப்பு ஒன்ருகவும்—

(i) பணத்திலான அல்லது பணத்தின் பெறுமதியிலான பிரதிபயன் அல்லது முழுப் பிரதிபயன் இல்லாமல் கம்பனியினுல் உறப்பட்ட கடன் ;

(ii) முழுமையாக அக்கம்பனியின் நன்மைக்கல்லாது உறப்பட்ட கடன் ;

(iii) அத்தகைய மீளளிப்பைப் பெறமுடியாதிருந்தாலொழிய வேறெவரேனுமாளிடமிருந்து மீளளிப்புப் பெற உரிமையிருக்கின்ற ஒரு கடன் ;

(iv) இச்சட்டத்தின் கீழ் அக்கம்பனியினது மூலதனத்திலிருந்து தவிர்த்து விடப்பட்ட அக்கம்பனியின் ஆதனம் எதன் மீதும் பொறுப்பளிக்கப்பட்ட, பிணையாக்கப்பட்ட அல்லது உறப்பட்ட அல்லது அவ்வாதனம் தொடர்பிலான கடன் ; அத்துடன்

(v) இலங்கையில் கொடுக்கப்படவேண்டுமென ஒப்பந்தஞ் செய்யப்பட்டிருந்து அல்லது இலங்கையிலுள்ள ஆதனத்தின் மீது பொறுப்பளிக்கப்பட்டு அல்லது பிணையாக்கப்பட்டிருந்து இலங்கைக்கு வெளியே அக்கம்பனியினுல் உறப்பட்ட ஏதேனும் கடன்,

அல்லது பொறுப்பு ஒன்ருக இல்லாமலும், 1971, மார்ச்சு 31 ஆந் தேதியன்றுள்ளவாருன அதன் எல்லாக் கடன்களினதும் பொறுப்புக்களினதும் மொத்தப் பெறுமதியிலும் பார்க்க, அத்தேதியன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட, இலங்கையிலுள்ள மூலதனத்தினது மொத்தப்பெறுமதி எந்தத் தொகையினுல் மிகையாக இருக்கின்றதோ அந்தத் தொகை என்று பொருளாகும்; அத்துடன் ஆதனத்தின் வெவ்வேறு பகுதிகளின் மீது பொறுப்பாக்கப்பட்ட ஒரே கடனை ஒரு தடவைக்கு மேலாகக் கணக்கிடுதலாகாது;'.

[4] ''முதன்மைச் சட்டம்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

' 'தனியார் கம்பனி'' என்பது கம்பனிகள் கட்டளைச் சட்டத்தில் அச்சொல்லமைப்புக்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டதாதல் வேண்டும்;';

[5] ''நம்பிக்கைப்பொறுப்பாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தில், அவ்வரைவிலக்கணத்தினிறுதியிலுள்ள முற்றுப் புள்ளிக்குப் பதிலாக அரைப்புள்ளியொன்றை இடுவதன் மூலமும் ; அத்துடன்

[6] அப்பிரிவினிறுதியில் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினைச் சேர்ப்பதன் மூலமும் :—

' ''மனைவி'' என்பது, தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் தீர்வையொன்றன் கீழ் அல்லது முறையாக நிறைவேற்றப்பட்ட பிரிவு வாழ்க்கை உறுதியொன்றன்கீழ் அவளது கணவனிலிருந்து பிரிந்து வாழுகின்ற அல்லது பிரிவு நிரந்தரமானதாக இருக்கக்கூடிய அத்தகைய் சூழ்நிலைகளில் அவளது கணவனிலிருந்து உண்மையாகப் பிரிக்கப்பட்டுள்ள மனைவியொருவரை உள்ளடக்காது.'.

25. இச்சட்டம் முதன்மைச்சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று பயனுடையதாகவந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

# 1973 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, அடகுபிடிப்போர் (திருத்தச்) சட்டம்

அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்

*1973 யூன் 30 ஆம் திகதி சான்றிடப்பட்டது.*

1. இச்சட்டமானது, *1973* ஆம் ஆண்டின் *23* ஆம் இலக்க அடகுபிடிப்போர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்திதன்மேல் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் *3* ஆம் பிரிவானது. அப்பிரிவின் *(2)* ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும் இரண்டாம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள படிவம் அ என்பதில் உள்ளாற்போன்று இருத்தல் வேண்டும்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் *3* ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; அத்துடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் *3*அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும்:—

*3*அ. மூன்றும் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம் ஒன்றை உடையவர், அத்தகைய உரிமம் தொடர்புபட்ட தொழிலை, அரசாங்க அதிபரின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடனன்றி வேறெவரேனும் ஆளுக்கு மாற்றுதலாகாதென்பதோடு, அத்தகைய முன் அங்கீகாரமில்லாது செய்யப்படும் அத்தகைய தொழிற் கைமாற்றமொன்று எல்லா நோக்கங்களுக்காகவும் வெற்றும் வறிதுமாதலும் வேண்டும்."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் *4* ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

*4.* மூன்றும் பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வோர் உரிமத்தினதும் பிரதி ஒன்றை அத்தகைய உரிமம் தொடர்புபட்ட தொழில் கொண்டு நடாத்தப்படும் மாவட்டத்தின் பொலிசுக் கண்காணிப்பாளருக்கு அரசாங்க அதிபர் அனுப்புதல் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள எண்ணிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் மீள எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

(2) உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபா உரிமக் கட்டணம் ஒன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்,".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள எண்ணிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் மீள எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்: —

"(2) மூன்றும் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம் ஒன்றை உடையவர் அத்தகைய உரிமத்தைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய உரிமம் உடையவர் அத்தகைய விண்ணப்பத்திற்கு முற்போந்த காலத்தின் போதும் அடகுபிடிக்கும் அவரது தொழில் தொடர்பிலும் இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் சாராம்சத்திற்கும் நோக்கங்களுக்கும் முரணான நடைமுறையைக் கையாண்டார் என அரசாங்க அதிபர் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு அவர் மறுக்கலாம்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(2) ஒவ்வோர் அடகுச்சீட்டிதழின் பின்புறத்திலும் மூன்றும் அட்டவணையிலுள்ள விபரங்கள், சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் தெளிவாக அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.".

8 முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது.

17. அடகுபிடிப்பவர் எவரும், ஓர் அடகுப் பொருள் மீதான கடனென்று தொடர்பில் மூன்றும் அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட வீதங்களை விஞ்சிய வீதத்தில் வட்டி விதித்தலாகாது.

ஆயின், ஓர் அடகுப் பொருள் மீதான கடனென்று தொடர்பில் தொழில் மொத்த வரவு வரி செலுத்தற்பாலதாகவிருக்குமிடத்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளது எதுவும், அடகுவைப்பவரிடமிருந்து அத்தகைய வரியை அறவிடுவதிலிருந்து அடகுபிடிப்பவரைத் தடைசெய்வதாகக் கருதப்படலாகாது.

இப்பிரிவில் ''அடகுப் பொருள்'' என்பது (அடகு வைக்கப்பட்டதும்) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் மீட்கப்படாததுமான அடகுப் பொருள் ஒன்றையும் உள்ளடக்கும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(4) அடகுபிடிப்பவர், (1)ஆம், (2)ஆம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, கடனும், அதன் மீதான வட்டியும், அத்தகைய கடன் தொடர்பில் செலுத்தற்பாலதான தொழில் மொத்த வரவு வரி, எதுவும் இருப்பின், அவ்வரியும் கொடுக்கப்பட்டதன்மேல், அவ்வடகு தொடர்பிலான அடகுச் சீட்டிதழைக் காண்பிக்கும் அடகு வைப்பவரிடம் அல்லது விடயத்திற்கேற்ப, அடகுச்சீட்டிதழை உடையவரிடம் அடகுப் பொருளை ஒப்படைத்தல் வேண்டும்; அடகு பிடிப்பவர் அடகுப் பொருளை அவ்விதம் ஒப்படைத்தல் தொடர்பில் நட்டம் கோரப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய அடகுச்சீட்டிதழை உடையவர் அந்த அடகுச்சீட்டை விற்றுவிட்டாரென, அல்லது வேறு வகையாகச் சட்டமுறையற்ற வகையில் அதைப் பெற்றுள்ளாரெனச் சந்தேகிப்பதற்கு அடகுபிடிப்பவருக்குக் காரணமிருப்பின், அடகு பிடிப்பவர் அந்த ஆளையும் சீட்டையும் கைப்பற்றித் தடுத்துவைத்து, கூடிய விரைவில் அவரையும் அதனையும் ஒரு பொலிசு அலுவலரிடம் அல்லது கிராம சேவையாளரிடம் ஒப்

படைக்கலாம்; அந்தப் பொலிசு அலுவலர் அல்லது கிராம சேவையாளர், அந்த ஆணையும் சீட்டையும், சட்டத்திற்கிணங்கக் கையாளப்படுவதற்கென, தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் உடனே கொணருதல் வேண்டும்.''.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

24. (1) அடகுப் பொருளொன்று தீ விபத்தினால் அல்லது தீ விபத்தின் விளைவாக நாசமடைந்து அல்லது சேதமடைந்துபோய் இருக்குமிடத்து, அது அவ்விதம் நாசமடைந்து அல்லது சேதமடைந்து போயிருப்பினும், அடகுபிடிப்பவர், அடகுப் பொருள் மீட்புக் காலத்திற்குள் அடகுப் பொருளின் பெறுமதி கேட்கப்பட்டதும் கடன் தொகையையும் வட்டியையும் அத்தகைய கடன் தொடர்பில் செலுத்தற்பாலதான தொழில் மொத்த வரவு வரி, எதுவும் இருப்பின் அவ்வரியையும் கழித்த பின்னர், அப்பெறுமதியைக் கொடுப்பதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும், அவரிடம் அடகு வைக்கப்பட்ட பொருள்களின் பெறுமதியின் முழு அளவுக்கு அவரது தொழிலைக் காப்புறுதி செய்திருத்தல் வேண்டும்.''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

''25. அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும், அடகுப் பொருள் மீட்கப்படும் நேரத்தில், அவருக்குச் செலுத்தப்பட்ட கடன் தொகைக்காகவும் வட்டிக்காகவும் அவரால் அறவிடப்பட்ட தொழில் மொத்த வரவு வரி, எதுவும் இருப்பின், அவ்வரிக்காகவும் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை அடகுப் புத்தகத்துடன் சேர்த்து வைத்திருத்தலும் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இரண்டாம் அட்டவணையிற் காட்டப்பட்ட படிவம் எ என்பதில் உள்ளாற் போன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, அது, வட்டியும் தொழில் மொத்த வரவு வரி, எதுவும் இருப்பின். அவ்வரியும் சேர்ந்து இருபது ரூபாவாக அல்லது அதற்கு மேலாக இருந்தாலொழிய, முத்திரைத் தீர்வைக்கு இலக்காதலுமாகாது.''.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள எண்ணிடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் மீள எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:

''(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அடகுப் பொருளொன்று பகிரங்க ஏலத்தின் மூலம் விற்கப்பட இருக்கின்றவிடத்து, அத்தகைய அடகுப் பொருள் எவரிடம் அடகு வைக்கப்பட்டுள்ளதோ அந்த அடகு பிடிப்பவர், அத்தகைய விற்பனைக்காகக் குறிக்கப்பட்ட தேதி பற்றியும் நேரம் பற்றியும் அத்தகைய விற்பனை நடாத்தப்படவிருக்கின்ற இடம் பற்றியும் அரசாங்க அதிபருக்கு ஆகக் குறைந்தது பதினுன்கு நாட்கால எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

28. விற்பனைத் தேதியன்று வருமதியாகவுள்ள கடன், வட்டி ஆகியவற்றினதும், அத்தகைய கடன் தொடர்பாகச் செலுத்தற்பாலதான தொழில் மொத்த வரவு வரி, எதுவும் இருப்பின், அவ்வரியினதும் தொகைக்கு மேலாக அடகுப் பொருள் ஒன்று இக் கட்டளைச்சட்டத்தின்கீழ் விற்கப்படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும், அடகு பிடிப்பவர்—

(அ) அடகுப் பொருள் விற்கப்பட்ட தொகை பற்றியும், விற்பனைக்கு அவசியமாகவிருந்த செலவினங்களையும் இறுப்பனவுகளையும் கழித்தபின்னர் அடகு வைத்தவரின் வரவில் இருக்கும் தொகை பற்றியும் அந்த அடகுப் பொருளை அடகு வைத்தவருக்கு உடனே அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய விற்பனைத் தேதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள், அவ்வடகுப் பொருள் தொடர்பிலான அடகுச்சீட்டை உடையவருக்கு அடகுவைத்தவரின் வரவிலிருக்கும் தொகையைக், கோரப்பட்டதும் கொடுத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட ஓராண்டுக் காலத்துக்குள் அத்தகைய கோரிக்கை எதுவும் செய்யப்படவில்லையானல், சொல்லப்பட்ட காலம் முடிவடைந்தவுடனே அடகு வைத்தவரின் வரவிலிருக்கும் தொகையை மிக அண்

மையிலுள்ள கச்சேரியில் அடகுவைத்த வரின் வரவிலிருக்கும் வண்ணம் வைப்பிலிடு தல் வேண்டும்.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது:—

30 இருபத்தேழாம் பிரிவின்கீழான அல்லது 28 ஆம் பிரிவின்கீழான அறிவித்தலொவ்வொன்றும், அடகுவைத்தவருக்கு. அடகுப் புத்தகத்திற் பதியப் பட்ட முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படு தல் வேண்டுமென்பதோடு, பதிவிற்கான செலவு அடகு வைத்தவரினல் ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்; அத்துடன் 26 (2) என்னும் பிரிவின் கீழான அறிவித்த லொவ்வொன்றும் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படு தலும் வேண்டும்.''

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஓ) அவரிடம் அடகுவைக்கப்பட்ட எல்லாப் பொருள் களினதும் பெறுமதியின் முழு அளவுக்கு அவருடைய தொழிலைக் காப்புறுதி செய்விக்கத் தவறும், அல்லது''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது:—

41. இக்கட்டளைச்சட்டத்தின் கீழ்த் தவறென்றுக் குக் குற்றவாளியாகியுள்ள ஆள் ஒவ்வொருவரும் ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாத காலமொன் றுக்கான இருவகையிலொருவகையான மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.''.

17' முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அவ்வட்டவணையிற் காட்டப்பட்ட படிவம் அ என்பதற் குப் பதிலாகப் பின்வரும் புதிய படிவத்தை இடுவதன் மூலமும்;—

''படிவம் அ

உரிமம்

..................................................மாவட்டத்
திற்கான அரசாங்க அதிபரான..........................
ஆகிய நான்..............................................
என்னும் இடத்திலுள்ள..................................
ஆகியவருக்கு ...............மாவட்டத்திலுள்ள.....
..........................................என்னும் இடத்தினெல்
லைக்குள்..........................................என்னும்
இடத்தில் அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின்
ஏற்பாடுகளின்கீழ் அடகுபிடிக்கும் தொழிலைக்
கொண்டு நடாத்துவதற்கு இத்தால் அதிகார
மளித்து உரிமம் அளிக்கின்றேன்.

இவ்வுரிமம் 19..... யூலை 31 ஆம் தேதியன்று முடிவடையும்.

..................................,
அரசாங்க அதிபர்.''

அத்துடன்

(ஆ) அவ்வட்டவணையிற் காட்டப்பட்ட படிவம் எ என்பதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய படிவத்தை இடுவதன் மூலமும்;—

''படிவம் எ
பற்றுச்சீட்டு

தேதி :..................

..........................ஆம் இலக்க அடக்குப்பொருளின் மீட்பின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்டது.

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| கடன்தொகை | .. | | |
| இலாபம் அல்லது வட்டி | .. | | |
| தொழில் மொத்த வரவுவரி | .. | | |
| மொத்தம் | .. | | |

''

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றும் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) ''அடகுபிடிப்போரால் விதிக்கப்படற்பாலதான வட்டியின் வீதங்கள்'' என்னும் தலைப்பை விட்டுவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வட்டவணையின் அ, ஆ என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

''அ. வட்டி வீதம்.

கடன் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாவுக்குமான அல்லது ஒரு ரூபாவின் பின்னமொன்றுக்கான வட்டிவீதம் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு இரண்டு சதமாதல் வேண்டும்.

''ஆ. தொழில் மொத்த வரவுவரி.

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான தொழில் மொத்த வரவுவரி, அடகுப்பொருள் ஒன்றின்மீதான கடன் பேரில் அடகுபிடிப்பவராற் செலுத்தப்படற்பாலதாகவிருக்குமிடத்து, அத்தகைய வரி அடகுவைத்தவரிடமிருந்து அறவிடப்படலாம்''.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் நாலாம் அட்டவணையானது, அவ்வட்டவணையின் 4 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஒழுங்குவிதி இடப்படுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

'' 4. ஏலவிற்பனையாளர், ஆகக்குறைந்தது ஒரு சிங்களச் செய்தித்தாளிலும், தமிழ்ச் செய்தித்தாளிலும், ஆங்கிலச் செய்தித்தாளிலும் இடப்படும் விளம்பரங்கள் மூலமும், விற்பனை நடத்தப்படவிருக்கின்ற பிரதேசத்தில் மக்கள் நடமாடும் இடங்களில் வெளிக்காட்டி வைக்கப்படும் அறிவித்தல்கள் மூலமும், விற்பனை பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டுமென்பதோடு. அத்தகைய விளம்பரங்களும் அறிவித்தல்களும்—

(அ) அடகுபிடிப்பவரின் பெயரையும் அவரது தொழில் இடத்தையும் ; அத்துடன்

(ஆ) அடகுப்பொருள் அடகுவைக்கப்பட்ட மாதங்களையும்,

எடுத்துக் கூறுவனவாக இருத்தலும் வேண்டும்.''.

# 1973 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க நிதிச் சட்டம்

**சிறீ வரிசைகளின் தனிவேறு இலக்கங்களையுடைய தனிப்பட்ட கார்களுக்கான ஒரு வரியை விதிப்பதற்கும், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான தொரு சட்டம்**

*1973 திசெம்பர் 11 ஆம் திகதி சான்றிடப்பட்டது*

1 இச்சட்டம், 1973 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க நிதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

**சிறீ வரிசைகளின் தனிவேறு இலக்கங்களையுடைய தனிப்பட்ட கார்களின் மீதான வரி**

2. 1972 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆந் தேதியன்று, சிறீ வரிசைகளின் தனிவேறு இலக்கமொன்று ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட ஒரு காரின் பதியப்பட்ட சொந்தக்காரரான ஒவ்வோர் ஆளும், அத் தேதிக்குப் பின்பு தனிப்பட்ட காராகப் பதியப்பட்ட மோட்டார் வாகனத்தின் முதலாவது சொந்தக்காரராகப் பதியப்பட்ட ஒவ்வோர் ஆளும், 3 (1) என்னும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறும், இச்சட்டத்தின் கீழ் அதற்கென ஆக்கப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்கவும் வரியொன்றை (இது இதனகத்திதன் பின்னர் "வரி" எனக் குறிப்பிடப்படும்) செலுத்துதல் வேண்டும் :

ஆயின், எப்படியிருப்பினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள்—

(1) மோட்டார் வாகனச் சட்டத்தின் 31 (4) என்னும் பிரிவின் கீழ் அரசிறை உரிமக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட எந்தவோர் ஆளுக்கும், அத்துடன்

(2) தனிப்பட்ட காரின் பதிவை நீக்குவதற்கென 1972 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆந் தேதிக்கு முன்பு விண்ணப்பித்திருந்து அத்தகைய விண்ணப்பத்தின்மீது காரின் பதிவு மோட்டார் வாகனப் பதிவாளரினால் நீக்கப்படுமிடத்து, எந்தவோர் ஆளுக்கும்,

ஏற்புடையனவாதலாகாது.

3. (1) வரியானது, 1973 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பு, அல்லது வாகனம் தனிப்பட்ட காராக முதன் முதலாகப் பதியப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத

காலம் முடிவடைவதற்கு முன்பு, இவற்றுள் எது பிந்தியதோ அப்போது, தோதான உரிமம் வழங்கும் அலுவலரிடம் செலுத்தப் படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறுயினும், முற்சொல்லப்பட்ட தேதியான 1973, திசெம்பர் 31 க்குப் பதிலாக பிந்திய தேதியொன்றை நியமித்தல் அவசியமானது அல்லது உசிதமானது என அமைச்சருக்குத் தோன்றினுல் அவர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் பிந்திய தேதியொன்றை நியமிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவிற்கிணங்க அத்தகைய வரி செலுத்துவதற் குரியதாகும் தேதியன்று அல்லது அதற்கு முன்பு அதனைச் செலுத் தத் தவறும் ஒவ்வோர் ஆளும்—

(அ) வரித் தொகையின் இருபது வீதமான குற்றப்பணத்தை தோதான உரிமம் வழங்கும் அதிகாரிக்குச் செலுத்து வதற்கு ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்குக் குற்ற வாளியாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஒவ்வோர் ஆளும், நீதிவான் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஆயிரம் ரூபாவிற்கு மேற் படாத குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(4) வரியின் தொகையும், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப் பட்ட தண்டமும், (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க அத்தகைய வரி செலுத்துவதற்குரியதாகும் தேதியிலிருந்து மூன்று மாத காலம் முடிவடைவதற்கு முன்பு தோதான உரிமம் வழங்கும் அதிகாரிக்குச் செலுத்தப்படாதவிடத்து, தோதான உரிமம் வழங்கும் அதிகாரி, அத்தகைய வரியையும், தண்டத்தையும், அத்தகைய வரியையும் தண்டத்தையும் செலுத்தத் தவறும் ஆளின் பெயரையும், அவர் கடைசியாக வசித்ததாக அறியப்படும் இடத்தையும் பற்றிய விபரங் களைக் கொண்டுள்ள சான்றிதழொன்றை, அத்தகைய இடம் அமைந்திருக்கும் பிரிவில் நியாயாதிக்கமுடைய நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். நீதிவானின் தண்டனைத் தீர்ப்பினுல் அத் தகைய ஆளின்மீது விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றுற் போன்று அத்தகைய வரியும் தண்டமும் அறவிடப்படவேண்டுமென நீதிவான் கட்டளையிடுதல் வேண்டும்.

4. அத்தகைய வரியும், அத்தகைய வரியைச் செலுத்தத் தவறி யமைச்சான தண்டமும் ஏதேனுமிருப்பின், உரிய காலத்தில் செலுத்தப்பட்டாலன்றி, 2 ஆம் பிரிவின் கீழ் வரி செலுத்தப்படற்

குரியதான மோட்டார் வாகனத்தின் புதுச் சொந்தக்காரராக எந்தவோர் ஆளாவது மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதலாகாது.

5. (1) அமைச்சர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும் இச்சட்டத்தின் நெறிகளுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவினுல் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, வரிகளுக்கானவையும் வரிகள் தொடர்பிலானவையும், வரிகள் செலுத்தவேண்டிய மாதிரியைக் கூறுகின்றவையுமான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குவிதியாவது, தேசிய அரசுப் பேரவையினுல் அது அங்கீகரிக்கப்பட்டு, அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் கசற்றில் வெளியிடப்படும்வரை, பயனுடையதாய் இருத்தலாகாது.

6. இப்பாகத்தில்—

''தனிவேறு இலக்கம்'', ''உரிமம் வழங்கும் அதிகாரி'', ''தனிப்பட்ட கார்'' என்பவை முறையே மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே கருத்துக்களையே உடையனவாகும்;

''அமைச்சர்'' என்பது மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தல் அவற்றுக்கு உரிமம் வழங்குதல் ஆகிய விடயம் அல்லது பணிகள் முதலமைச்சரால் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;

''பதிவுசெய்யப்பட்டது'' என்பது மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது எனப் பொருள்படும்.

## பாகம் II

### 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கான திருத்தம்

7. பின்வரும் புதிய பிரிவு, 152 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; அது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் 152அ என்னும் பிரிவாகப் பயனுடைத்தாதல் வேண்டும்:—

152அ. (1) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எவரேனும் ஆளினுல் (இதன்மேல் இப்பிரிவில் ''ஏற்றுமதியாளர்'' எனக் குறிப்பிடப்படுவார்) ஏதேனும் பொருள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருந்து,—

(அ) அத்தகைய பொருள் இலங்கையில் தயாரிக்கப்பட்டது அல்லது உற்பத்தி செய்யப்பட்டது

என்றும், அத்தகைய பொருளின் தயாரிப்பாள ரிடமிருந்து அல்லது உற்பத்தியாளரிடமிருந்து ஏற்றுமதியாளரினுல் அது கொள்வனே செய்யப் பட்டுள்ளது என்றும்

(ஆ) அத்தகைய பொருளேக் கொள்வனே செய்வதற் கென ஏற்றுமதியாளரினுல் செலுத்தப்பட்ட விலே, அந்தத் தயாரிப்பாளரின் அல்லது உற் பத்தியாளரின் தொழிலின் மொத்த வரவின் பகுதியாக அமைந்துள்ளது என்றும்;

(இ) அவருடைய மொத்த வரவு தொடர்பில் தொழில் மொத்த வரவு வரி அந்தத் தயாரிப்பாள ரினுல் அல்லது உற்பத்தியாளரினுல் உண்மை யாகச் செலுத்தப்பட்டுள்ளது என்றும்—

ஆணேயாளர் திருப்தியடையுமிடத்து,

அப்பொருளுக்காக ஏற்றுமதியாளரினுல் செலுத்தப் பட்ட கொள்வனே விலேக்குக் காரணமாகக்கூடிய அத் தகைய தொகை, அப்பொருளின் உற்பத்தியாளரினுல் அல்லது தயாரிப்பாளரினுல் அத்தொழிலின் மொத்த வரவு தொடர்பாகச் செலுத்தப்பட்ட தொழில் மொத்த வரவு வரியிலிருந்து ஆணேயாளரினுல் ஏற்றுமதியாளருக் குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அந்த ஏற் பாடுகளில் ''பொருள்'' என்பதற்கான குறிபீடுக ளெல்லாம், விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய ஏனம் கொள்கலம் அல்லது உறை ஆகியவற்றிற்கான குறிப் பீடுகள் என்றுற்போன்று அதே முறையில் அந்த உட் பிரிவில் குறிப்பிடப்பட்ட பொருளே ஏற்றுமதி செய்யப் பயன்படுத்திய ஏதேனும் ஏனம், கொள்கலம் அல்லது உறை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அத்தகைய பொருளே ஏற்றுமதி செய்த பின்பு மூன்று மாதங்களுக்கு முன்பாக இல்லாமலும், ஒன்பது மாதங்களுக்குப் பிந்தாமலும். அத்தகைய பொருளின் ஏற்றுமதியாளரினுல் அத்தகைய கொடுப்பனவிற்கு எழுத்தில் ஒரு கோரிக்கை செய்யப்பட்டாலன்றி, ஏற்று மதி செய்யப்பட்ட ஏதேனும் பொருள் தொடர்பாக, அல்லது ஏதேனும் பொருளும் அப்பொருளே ஏற்றுமதி செய்யப் பயன்படுத்திய ஏனமும், கொள்கலமும் அல்லது உறையும் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் எக்கொடுப்பனவாவது ஆணேயாளரினுல் செய்யப்படுத லாகாது.''.